வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 10.01.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 32 பக்கங்கள் : 12




★ மாகாணங்களுக்கு முழு அதிகாரம்!

★ அரசியல் கைதிகள் விடுதலை!

★ தமிழரின் காணிகள் விடுவிப்பு

# இந்த மாத முடிவுக்குள் நிறைவேற்ற வேண்டும்!

## ஜனாதிபதிக்கு காலக்கெடு விதிக்க தமிழ் தேசிய கட்சிகள் தீர்மானம்!

கொழும்பு, ஜனவரி 10

**ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டு நிறைவேற்றக்கூடிய விடயங்களை இந்த மாத்துக்குள் - ஜனவரி 31இற்குள் நிறைவேற்றி நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவேண்டும். இதைத் தொடர்ந்து, அடுத்த கட்டப் பேச்சுகளை முன்னெடுப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.**

இதன்படி, மாகாணங்களுக்கு முழு அதிகாரம் (13ஆவது திருத்தச்சட் டத்தை முழுமையாக அமுல்படுத்துதல்), அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழ் மக்களின் காணி விடுவிப்பு மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி போன்ற விடயங்களை ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான இன்றைய சந்திப்பில் வலியுறுத்தவுள்ளன.

11

## தீர்வுக்கான பேச்சு இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 10

தமிழ் மக்களின் இனப் பிரச்னை தீர்வு தொடர்பாக ஜனாதிபதி, தமிழ் தேசிய கட்சிகளுடனான பேச்சு இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பேச்சு நடைபெறும். இன்றைய தினம் ஆரம்பமாகும் இந்தப் பேச்சு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடரும்.

இந்தப் பேச்சில் தமிழ்க் கட்சிகளின் சார்பில் இரா. சம்பந்தன், தமிழரசு கட்சி தலைவர் மாவை. சேனாதிராசா, ரெலோ தலைவர்

11

## தமிழரசு தனித்து போட்டி? இன்றே தீர்மானிக்கப்படும்!

கொழும்பு, ஜன. 10

இலங்கை தமிழரசு கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டாகப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இன்றைய தினமே கலந்துரையாடப்படும் என்று அறியவருகிறது.

நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் சந்தித்து ஜனாதிபதியுடனான பேச்சில் வலியுறுத்தப்பட வேண்டிய

11

## பருத்தித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு இன்று!

வடமராட்சி, ஜன. 10

பருத்தித்துறை நகரசபை தவிசாளர் தெரிவு இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை தலைவர் இருதயராசா, 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் பதவி விலகினார். இதனால் புதிய தவிசாளர் தெரிவு நடைபெறவுள்ளது.

11

## பஸிலை ஓரங்கட்டும் ராஜபக்ஷக்கள்!

கொழும்பு, ஜன. 10

பொதுஜன பெரமுனவின் "மூளை" என்று வர்ணிக்கப்படும் பஸில் ராஜபக்ஷவை அவரின் குடும்பத்தை சேர்ந்தவர்களே ஓரங்கட்ட தொடங்கியுள்ளனர் என்று அறிய வருகிறது.

பஸில் ராஜபக்ஷ கொழும்பு பத்திரமுல்லையிலுள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலின் பின்புறமாக அமைந்துள்ள அவரின் வீட்டில் வசித்து வருகிறார்.

முக்கிய சந்திப்புகள், கூட்டங்கள்,

11



## தமிழ் மக்கள் கூட்டணியில் இணைகிறார் மணிவண்ணன்!

யாழ்ப்பாணம், ஜன. 10

உள்ளூராட்சி தேர்தலை மணிவண்ணன் அணியினர் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து எதிர்கொள்வர் என்று கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற

11

## மின் கட்டண உயர்வுக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜன. 10

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சரவையில் நேற்றைய தினம் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியளவில் மீள் பரிசீலனை செய்யும் அடிப்படையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

11

## அமெரிக்க கிறீன் கார்ட்டுக்கு விண்ணப்பித்தார் கோட்டாபய

கொழும்பு, ஜன. 10

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா செல்வதற்காக கிறீன் கார்ட்டுக்கு விண்ணப்பித்துள்ளார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில், குடும்பத்தினருடன் டுபாய்க்கு சுற்றுலா சென்ற கோட்டாபய ராஜபக்ஷ அங்கிருந்தவாறே, கிறீன் கார்ட் வீஸாவுக்கு விண்ணப்பித்தார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## இலங்கையின் நிலை இன்னும் மோசமாகும்!

### பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 10

இலங்கையின் தனியார் கடன் வழங்குநர்களான உலகின் சக்திவாய்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் ஹெட்ஜ் நிதியத்தின் வலுவான நிலைப்பாடு இலங்கையின் நிலைமையை மோசமாக்கும் என்று பொருளாதார மற்றும் அபிவிருத்தி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

182 பொருளாதார வல்லுநர்கள்

11

## தம்பியின் கத்தி குத்தில் அண்ணன் உயிரிழப்பு!

### கிளிநொச்சியில் நேற்று சோகம்!

கிளிநொச்சி, ஜன. 09

தொலைபேசி தொடர்பில் சகோதரர்களிடையே ஏற்பட்ட தர்க்கத்தில் தம்பி கத்தியால் குத்திய தில் அண் ணன் மரணமானார்.

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் நேற்று திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், மூன்று பிள்ளைகளின் தந்தையான தருமராசா தவசீலன் (வயது 37) என்பவரே

11

## மதுபோதையில் மோ. சைக்கிள் செலுத்தியவர் விபத்தில் மரணம்!

வடமராட்சி, ஜன. 10

மதுபோதையில் - அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கிவீசப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இதில், நான்கு பிள்ளைகளின் தந்தையான புலோலி தெற்கை சேர்ந்த இராசு புவனேஸ்வரன்

11

# இப்படியும் நடக்கிறது...!

கனடாவிலிருந்து நண்பர் ஜெகதீசனிடமிருந்து ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. யாழ்ப்பாணம் 'ஈழநாடு'வில் பணியாற்றிய காலத்திலும் பின்னர் கனடாவில் சஞ்சிகை நடத்திய காலத்திலும் அவர் எதை எழுதினாலும் இரண்டு தடவை வாசித்தால்தான் அவர் என்ன சொல்ல வருகின்றார் என்பதை புரிந்துகொள்ளலாம்.

அவரின் மின்னஞ்சல் இதுதான்:

"எனக்கு முன்னால் இரண்டு கழுதைகள் எனின், எனக்குப் பின்னால் உள்ள தேசம் படுகொலை செய்யப்படும் என்பதைத் தான் வெள்ளைக்காரன் அன்றே சொல்லிப் போட்டான். மாநாட்டை இழுத்தடிக்கும் மாவைக்கு மட்டும் ஆங்கில அறிவு கொஞ்சமாவது இருப்பின் ASSASSINATION இற்கு விளக்கம் இதுதான் என்பாரோ?" - இவ்வளவுதான் அந்த மின்னஞ்சல்.

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றபோது, தமிழரசின் அடுத்த பொதுச்சபை கூட்டம், அதாவது வருடாந்த மாநாடு எப்போது நடக்கும் என்பது முடிவெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், உள்ளூராட்சி தேர்தல் பற்றிய முடிவெடுப்பதில் உறுப்பினர்களிடையே நடந்த கடும் வாக்குவாதமும் தேர்தலில் தனித்து போட்டியிடுவது, கூட்டமைப்பில் மற்றவர்களை உள்வாங்குவதில்லை - பதிவுசெய்வதில்லை என்ற முடிவுகளால் மாநாட்டு விவகாரம் பின்னுக்குப் போய்விட்டது.

'அசாசிநேஷன்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ்: படுகொலை. அந்த அசாசிநேஷனில் உள்ள ஏ எஸ் எஸ் என்றால் அதன் தமிழ் கழுதை. முன்னால் உள்ள இரண்டு கழுதைகளை எடுத்துவிட்டால் பின்னாலுள்ளது நேஷன்: தேசம்.

அதாவது முன்னால் உள்ள இரண்டு கழுதைகளை எடுத்துவிட்டால் பின்னால் உள்ள தேசம் படுகொலை செய்யப்படும் என்று அவர் சொல்கிறார்.

அதற்கும் மாவை தமிழரசின் மாநாட்டை இழுத்தடிப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று மீண்டும் தலையை சொறியத் தேவையில்லை என்று நினைக்கின்றேன்.

இப்போது, தமிழரசு எடுத்த முடிவுகள் குறித்து இன்று கூட்டமைப்பின் பங்காளிகளுடனான சந்திப்பில் இறுதி முடிவு எடுக்கப்படவிருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தலில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தனித்தனியாக போட்டியிடுவது பற்றி தமிழரசு முடிவெடுத்தது பற்றி மற்றுமொரு பங்காளிக் கட்சித் தலைவருடன் பேசியபோது அவர் சொன்னார், அவர்கள் தாங்கள் தனியாக போட்டியிடுவது என்று முடிவெடுத்தது அவர்களின் உரிமை. ஆனால், கூட்டமைப்பிலுள்ள மற்றைய இரண்டு கட்சிகளையும் தனித்தனியாகப் போட்டியிடுங்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கு யார் அந்த உரிமையைக் கொடுத்தது என்பது தெரியவில்லை", என்று.

உண்மைதான், அவர்கள் இருவரும், அதாவது கூட்டமைப்பிலுள்ள மற்றைய கட்சிகள் புளொட்டும், ரெலோவும் எப்படி தேர்தலில் போட்டியிடுவது என்று அவர்கள்தானே முடிவெடுக்கவேண்டும்?

அது அவர்கள் இருவரும் சேர்ந்து கேட்பதாகவும் இருக்கலாம் அல்லது கூட்டமைப்புக்கு வெளியே இருக்கும் கட்சிகளுடன் இணைந்து கேட்பதென்று முடிவெடுப்பதாகவும் இருக்கலாம். அது அவர்களின் உரிமை. அதில் வேறு ஒரு கட்சி தலையிட முடியாதுதான்.

இன்றைய கூட்டமைப்பின் தலைமைக்குழுக் கூட்டத்துக்கு பின்னர் அவர்கள் என்ன முடிவெடுக்கின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

கூட்டமைப்பில் மற்றைய தமிழ் தேசியக் கட்சிகளை இணைத்துக்கொள்வது என்ற கோரிக்கை தொடர்பாக தமிழரசு எடுத்த முடிவு பற்றி நேற்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

விக்னேஸ்வரன் விரும்பினால் மீண்டும் வந்து தமிழரசில் இணைந்துகொள்ளலாம் என்று தமிழரசு கோரிக்கை விடுத்தது பற்றி நேற்றைய பத்தியில் எழுதியிருந்தோம்.

அது குறித்து குறிப்பிட்ட நண்பர் ஒருவர், விக்னேஸ்வரனை முதலமைச்சாராக களமிறக்க கோரிக்கை விடுக்கப்பட்டபோது, அவர் அனைத்துக் கட்சிகளும் கூட்டாக கோரிக்கை விடுத்தால் மாத்திரமே தான் போட்டியிடுவேன் என்று தெரிவித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அதன் அர்த்தம் தான் ஒரு கட்சியின் வேட்பாளர் அல்ல என்பதும், அவர் அனைத்துக் கட்சிகளின் பொது வேட்பாளராகவே களம் இறங்குவேன் என்பதும்தான்.

ஆக, விக்னேஸ்வரன் தமிழரசு கட்சிக்கு மட்டும் சொந்தக்காரராக இருந்தவரல்ல. அவர் பொது வேட்பாளர்.

இப்போது அவர் ஒரு கட்சியின் தலைவர். அவருக்கு முப்பத்தி ஐந்து ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்து அவரை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கின்றார்கள்.

அவரின் கட்சியை கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ள முடியாது என்றால் அதனை சொல்வதற்கு தமிழரசுக்கு உரிமையுண்டு. ஆனால், அதனை வடிவேலுவின் நகைச்சுவை பாணியில் சொல்வதானால், ஒரு பொறுப்புள்ள கட்சிக்கு அழகல்ல.

**- ஊர்க்குருவி**

# தேர்தலை இரத்து செய்ய கோரிய வழக்கு; தள்ளுபடி செய்யுமாறு இடையீட்டு மனுக்கள்!

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை இரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுவை விசாரிக்காமல் தள்ளுபடி செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் இரண்டு இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு ஓய்வுபெற்ற கேணல் டபிள்யூ. எம். ஆர். விஜயசுந்தர இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

முழு நாடும் நெருக்கடி நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான தேர்தல்கள் ஆணைக் குழுவின் தீர்மானம் பேரழிவுக்கு வழிவகுக்கும் என்றும் பொது மக்கள் மீது சுமையை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் செயல்குழு உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வத்தகல மற்றும் சோசலிஷ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகர ஆகியோரால் இடையீட்டு மனு ஒன்று தாக்கல் நேற்று செய்யப்பட்டது.

இந்த மனு எவ்வித சட்ட அடிப்படையும் இல்லை என்றும் மனுவை பராமரிப்பதற்கு நியாயமான சட்ட அடிப்படை உள்ளது என்பதை மனுதாரர் நிறுவத் தவறிவிட்டதாகவும் இடையீட்டு மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# யாழில் தேசிய தைப்பொங்கல் விழா; சகல கட்சிகளையும் அழைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய தைப்பொங்கல் விழா எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறவுள்ளது.

நல்லாட்சி அரசின் காலத்தில் கடந்த 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசிய தைப் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்வதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இறுதி நேரத்தில் அவர் பங்கேற்கவில்லை. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலேயே நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிலையில் 8 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்தில் தேசிய தைப்பொங்கல் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படவுள்ளது. (ஐ)

# முள்ளியவளை துயிலும் இல்ல பணிக்குழுவிடம் விசாரணை!

முல்லைத்தீவு, ஜன. 10

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்கள் 6 பேரை முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் அந்த உறுப்பினர்களிடம் நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்களான கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கமலநாதன் விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், திருச்செல்வம் இரவீந்திரன், தவராசா அமலன், சமூக செயற்பாட்டாளர்களான ஞானதாஸ் யூட் பிரசாந், பாஸ்கரன் வனஜன் ஆகியோரிடமே வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குறித்த பணிக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரையும் நேற்று பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸார் வீடுகளுக்கு சென்று நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது குறித்த ஆறு பேரும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக முதல் நாள் 26ஆம் திகதி மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் மாவீரர் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்ட வளைவில், தமிழீழ வரைபடம், துப்பாக்கி, மாவீரர்கள் சிலரது புகைப்படங்கள் காணப்பட்டமை தொடர்பிலேயே குறித்த வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளதாக தெரிவித்தனர். (ஐ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மைத்திரியுடன் கூட்டு இல்லை!

## குமார வெல்கம அறிவிப்பு

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவும், புதிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணி வைக்கப் போவதாக அந்தக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தேர்தல் நடக்குமா? என்ற உறுதியற்ற நிலையே காணப்படுகிறது. எவ்வாறாயினும் எமது கட்சி சில இடங்களில் கூட்டணியாகவும் சில இடங்களில் சுயேச்சையாகவும் போட்டியிடும் - என்றார்.

மேலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைக்கப்போவதில்லை - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஊழியர்களின் ஊதிய வரியை நிறுவனம் மூலம் செலுத்த தடை!

## நிதி அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, ஜன. 10

அரச மற்றும் அரசு சார் நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஊதிய வரியை அந்தந்த நிறுவனங்களின் நிதி மூலம் செலுத்துவதைத் தடை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு நேற்று தெரிவித்தது.

இது தொடர்பான சுற்றறிக்கை இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அளவை தாண்டி வருமானம் ஈட்டும் அரச மற்றும் அரசு சார் நிறுவனங்களின் ஊழியர்களுக்காக வரி அறிமுகப்படுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், நிறுவனங்களின் நிதி வரி செலுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது - என்றார்.

இதன் மூலம் அரச மற்றும் அரசு சார் நிறுவன ஊழியர்களுக்கு நிறுவனங்களின் நிதியின் ஊடாக வரி செலுத்துவதை தடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

Eelanadu
10.01.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# பிரதான விடயங்களில் கவனம் செலுத்துங்கள்?

தேசிய இனப்பிரச்னை தொடர்பிலான பேச்சுகள் வெற்றியளிக்குமா அல்லது இல்லையா என்பதற்கப்பால் இவ்வாறானதொரு சூழலில் மிகுந்த பொறுப்புணர்வுடனும், தந்திரோபாயத்துடனும் தமிழ்த் தேசிய கட்சிகள் நடந்துகொள்ள வேண்டும். பேச்சில் பேரம் பேசுவதற்கான பலமான நிலையில் தமிழ் கட்சிகள் இல்லை. ஆகக்குறைந்தது, அதற்கான கூட்டு வேலைத் திட்டம்கூட இல்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் இன்றைய சூழலில் தேர்தலை முன்வைத்து தேவையற்ற வகையில் விவாதங்களை உருவாக்குவது பொருத்தமானதொரு விடயமல்ல.

அரசியல் கட்சிகள் என்றால் தேர்தல் நலனிருக்கும். தேர்தல்களின்போது தாங்கள் முன்னணி வகிக்க வேண்டுமென்று ஒவ்வொரு கட்சிகளும் – அதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் – தாங்களே மீளவும் பாராளுமன்ற உறுப்பினர்களாக வரவேண்டுமென்று எண்ணுவதும் இயல்பான விடயங்கள்தான். ஆனால், தேர்தல் கணக்குகள் தமிழ் மக்களின் அடிப்படையான விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது.

ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சு தொடர்பில் பேசிக் கொண்டிருக்கும் போது, கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசு கட்சி, உள்ளூராட்சி மன்ற தேர்தலை தனியாக எதிர்கொள்வதாக அறிவித்திருக்கின்றது. உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையிலுள்ள சிக்கல்களே இதற்குக் காரணமென்று தமிழரசுக் கட்சி கூறுகின்றது. ஆனால், மறுபுறம் கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைக்க முயற்சிப்பதான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. தென்னிலங்கை அரசியல் குழப்பமடைந்திருக்கின்ற சூழலில் தமிழ்த் தேசிய கட்சிகள் தேர்தலை முன்வைத்து தங்களின் பிளவு நிலையை காண்பிக்கக்கூடாது.

இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி இலங்கைத் தீவின் அரசியல் கட்டமைப்பையும் பெரியளவில் பாதித்திருக்கின்றது. பெருமளவில் சிதைத்துவிட்டதெனலாம். இவ்வாறானதொரு சூழலில் முடிந்தவரையில் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். எவ்வாறு பலரையும் ஒரு பொது வேலைத் திட்டத்துக்குள் கொண்டுவர முடியுமென்று சிந்திக்க வேண்டும். சிறிய, சிறிய கட்சிகளாக வாக்குகளை பிரித்தாளுவதில் எவ்வித பயனுமில்லை. உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதும் இதுவரையில் அடையாளமற்றிருந்த பலர் கட்சிகள் என்னும் பெயரிலும் சுயேச்சைக் குழுக்களாகவும் களமிறங்க முற்படுகின்றனர். இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகளே பிரதான காரணமாகும். தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் நேர்த்தியான கட்டமைப்பையும் வேலைத்திட்டத்தையும் பேணியிருந்தால் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது.

தமிழ்த் தேசியம் என்பது அடிப்படையில் மக்களை திரட்சியாக்குவதாக இருக்க வேண்டும். ஆனால், மக்களை சிதறடிக்கவே தேசியம் அதிகம் பயன்படுவதாக தெரிகின்றது. கூட்டமைப்போடு முரண்பாடுள்ளவர்கள், கட்சிகளிலுள்ள தனிநபர்களோடு முரண்பாடுள்ளவர்கள் என்று ஒவ்வொருவரும் தங்களை தனியான கட்சியாக முன்னிலைப்படுத்திக் கொள்கின்றனர். இருக்கின்ற கட்சிகள் போதாதென்று, க. வே. பாலகுமாரனால் 1990களில் கலைக்கப்பட்ட ஈரோஸ் அமைப்பை சேர்ந்தவர்களில் ஒரு குழுவினரும் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவுள்ளனர்.

ஒரு சிறிய தேசிய இனத்துக்கு எத்தனை கட்சிகள்? 2009இல், விடுதலைப் புலிகள் இயக்கம் வீழ்சியடைந்தபோது, ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமேயிருந்தது. அதற்கு வெளியில் அரச ஆதரவு கட்சிகள் இருந்தன. ஆனால், இன்று? இப்போது ஒன்பது கட்சிக் கூட்டு, பதினொரு கட்சிக் கூட்டென்று விவாதிக்கும் அளவுக்கு கட்சிகள் பல்கி பெருகியிருக்கின்றன. இதற்கு சம்பந்தனின் தலைமையும் ஒரு முதன்மையான காரணமாகும். ஒரு மூத்த தலைவராக ஏனைய கட்சியினரை அரவணைத்து சென்றிருந்தால் பல கட்சிகள் உருவாகியிருக்காது. கூட்டமைப்பின் வீழ்ச்சியும், இயலாமையுமே தமிழ்த் தேசிய அரசியல் சிதைவுற்றமைக்கு காரணம். இந்த நிலைமை இப்போதும் தொடர்வதுதான் துரதிர்ஷ்டவசமானது.

# இந்திய மத்தியஸ்தத்தை கோரி துணை தூதரகத்தில் மனு!



*யாழ்ப்பாணம், ஜன. 10*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே நடக்கும் பேச்சுகளில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று கோரி இந்தியத் துணைத் தூதுவரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.*

*ஜனாதிபதி - தமிழ்க் கட்சிகளுடனான பேச்சில் இந்திய மத்தியஸ்தம், தமிழ் கட்சிகளின் ஒன்றிணைவு என்பவற்றை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு கடந்த 5ஆம் திகதி முதல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவி போராட்டத்தை நடத்தி வருகின்றது.*

*இந்த நிலையில், இந்த அமைப்பினர் நேற்றைய தினம் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனை யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் சந்தித்தனர்.*

*இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராசா,*

*கடந்த 5 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை (இன்று) வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்படும் பேச்சுகளில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியத் துணைத் தூதுவரிடம் முன்வைத்துள்ளோம் - என்றார்.*

*இந்தச் சந்திப்பில் மனித உரிமைகள் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன், மன்னார் சமூக, பொருளாதார முன்னேற்றக் குழுவின் பணிப்பாளர் ஜே. யார்ட்சன் பிகுராடோ ஆகியோரும் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு சார்பில் பங்கேற்றனர்.*

*(ஐ-03)*

# ஆய்வாளர் திருச்செல்வத்துக்கு கௌரவ கலாநிதி பட்டமளிப்பு



*யாழ்ப்பாணம், ஜன. 10*

*வரலாற்று ஆய்வாளர் என். கே. எஸ். திருச்செல்வத்துக்கு அவரின் தமிழர் வரலாறு மற்றும் இந்து சமய பாரம்பரியம் தொடர்பான 25 வருட கால ஆய்வுப் பணியைப் பாராட்டி உலகத் தமிழ்ச் செம்மொழிப் பல்கலைக்கழகம் சென்னையில் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்தது.*

*சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். ராஜேஸ்வரன் அவருக்கு கலாநிதி பட்டத்தை வழங்கினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசியர் பி.சுதாகர், உலகத் தமிழ் செம்மொழிப் பல்கலைக்கழகவேந்தர், முனைவர் எல்.முத்துக்குமரன் ஆகியோர் முன்னிலையில் இப்பட்டம் வழங்கப்பட்டது.*

*சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிப்பாளர், முனைவர் உலகநாயகி பழனி திருச்செல்வத்தின் பணிகளைப் பற்றிய சிறப்புரையை வழங்கினார்.*

*(ஐ)*

# காணாமல்போன இளைஞர் சடலமாக மீட்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 10*

*போதைப் பொருளுக்கு அடிமையாகி அதிலிருந்து மீள்வதற்காக சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*பொன்னாலை பிள்ளையார் கோவிலடியில் உள்ள குளத்திற்கு அருகாமையில் உள்ள கிணற்றிலிருந்தே இளைஞரின் சடலம் மீட்கப்பட்டது.*

*இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணமோகன் கிருசாந்தன் (வயது 21) என்பவராவார்.*

*இவர் கடந்த 5 மாதங்களாக பொன்னாலையில் உள்ள சித்தப்பா வீட்டில் வசித்து வந்துள்ளார். நேற்று முன்தினம் அவரின் 21ஆவது பிறந்தநாளாகும். இந்நிலையில் அன்றிரவு அவர் காணாமல் போயிருந்தார்.*

*இந்நிலையிலேயே, அவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். குறித்த இளைஞன் பல மாதங்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிய நிலையில் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று கூறப்படுகின்ற இளைஞரின் மரணம் குறித்து வட்டுக் கோட்டை பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(ஐ-03)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 10 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 26
நல்ல நேரம் : 07.30 - 9.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
பயணங்களால் அலைச்சல் உண்டாகும் என்றாலும் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். உங்கள் திறமை வெளிப்படும். உறவினர் ஒருவரால் சிறு சிறு நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**இடபம்**
பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு மதிப்பு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் வீடு தேடி வருவார். அரசு வழியில் லாபம் உண்டாகும். தடைபட்டிருந்த பணம் வந்து சேரும்.

**மிதுனம்**
உற்சாகமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். நிதிநிலை உயரும். வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த லாபம் வரும். பழைய கடனகளை அடைப்பீர்கள். பிரச்னை முடிவிற்கு வரும்.

**கடகம்**
கவனக்குறைவால் உங்கள் செயல்களில் தடுமாற்றம் ஏற்படும். நிதானம் அவசியம். வேலைபளு அதிகரிக்கும். செயல்களில் கவனம் தேவை. நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி சற்று தாமதமாகும்.

**சிம்மம்**
பண பரிவர்த்தனையில் கவனம் தேவை. வேறு சிந்தனை வேண்டாம். விழிப்புடன் செயல்படுவதால் விரயங்களைத் தவிர்க்க முடியும். நட்பு வட்டம் விரியும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**கன்னி**
நீங்கள் எதிர்பார்த்த வருமானம் இன்று வந்து சேரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். முன்பு செய்த முதலீடு ஒன்றில் இருந்து எதிர்பாராத லாபம் காண்பீர்கள். நிதிநிலை உயரும்.

**துலாம்**
வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை லாபத்தை உண்டாக்கும். கோபத்தை தவிர்ப்பது நல்லது. புதிய வாய்ப்புகள் உங்களைத்தேடி வரும். நேற்றைய எண்ணம் நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் திறமையால் ஒரு செயலில் லாபம் காண்பீர்கள். பகைவர்கள் விலகிச் செல்வார்கள். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**
முயற்சிகளில் தடுமாற்றம் ஏற்படும். பகைவர்களால் நெருக்கடி தோன்றும். உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் காணாமல் போவார்கள். உத்தியோகத்தில் எதிர்ப்பு வலுக்கும். அமைதியாக இருப்பது நன்மை தரும்.

**மகரம்**
புதிய நண்பர் ஒருவரால் உங்கள் எண்ணம் நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும்.

**கும்பம்**
மறைமுகமாக தொல்லை கொடுத்து வந்தவர்களை கண்டறிந்து விலக்குவீர்கள். பகைவரால் உணடான பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். உங்கள் எண்ணம் இன்று நிறைவேறும்.

**மீனம்**
உறவினர்கள் உதவியுடன் ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். பணி புரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள்.

# ‘தமிழ்நாடு’, ‘திராவிட மொடல்’ சொற்களைகூற மறுத்த ஆளுநர்!

சென்னை, ஜன. 10

‘தமிழ்நாடு’, ‘திராவிட மொடல்’ என்ற சொற்களை ஆளுநர் தவிர்த்து விட்டார் என்று தி. மு. க. கூட்டணி கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

சட்டப் பேரவையில் வழக்கமாக ஆண்டு முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் தொடங்கும். அந்த வகையில், இந்தாண்டுக்கான முதல் கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு ஆளுநர் ஆர். என். ரவி உரையுடன் தொடங்கியது.

உரையை தொடங்கிய ஆளுநர்,

“தமிழக சகோதர - சகோதரிகளுக்கு வணக்கம்”, “முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள்”, என்று தமிழில் கூறி தனது உரையை தொடங்கினார்.

அவர் தனது உரையில் தமிழ்நாடு என்ற சொல்லுடன் திராவிட மொடல் என்ற வார்த்தையை படிக்காமல் புறக்கணித்தார் என்று கூறப் படுகின்றது. இதையடுத்து அவையிலேயே சர்ச்சை வெடித்தது.

இதையடுத்து, ஆளுநரின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து தி. மு. க. கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு செய்தன. இதன் படி, காங்கிரஸ், ம. தி. மு. க., வி. சி. க, சி. பி. எம்., சி. பி. ஐ. உள்ளிட்ட கட்சிகள் வெளி நடப்பு செய்தன.

இது குறித்து காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் செல்வப் பெருந்தகை கூறுகையில், “ஆளுநர் ஆர்.என்.ரவி ஆளுநர் உரையை படித்துக் கொண்டு உள்ளார். தமிழகத்தின் மாண்பு, தமிழகத்தின் மரபு எல்லாம் தமிழக அரசு எழுதிக் கொடுக்கின்ற உரையை படிக்க வேண்டும். ஆனால், ஆளுநர் விட்டு விட்டு படிக்கிறார்.

தமிழ்நாடு என்று வரும் போது தமிழ்நாடு என்று சொல்லவில்லை. திராவிட மொடல் என்று வரும் போது திராவிட மாடல் என்று சொல்லவில்லை. இவ்வாறு விட்டு விட்டு படிக்கிறார். இதுதான் ஆளுநரின் போக்கு. ஆளுநரின் சர்வாதிகாரம். ஆளுநரின் ஆர். எஸ். எஸ். சித்தாந்தம். ஆளுநர் மரபை மீறி, அரசியல் அமைப்பு சட்டத்தை மீறி, ஜனநாயகப் படுகொலையை வரலாற்று சிறப்புமிக்க சட்டப்பேரவையில் செய்து கொண்டுள்ளார்.” என்று கூறினார். (ஐ)

# அரசு, சட்டப் பேரவையை ஆளுநர் அவமதித்துள்ளார்

## பாட்டாளி மக்கள் கட்சி கண்டனம்

சென்னை, ஜன. 10

ஆளுநர் செய்தது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், சட்டப்பேரவையையும் அவமதிக்கும் செயல் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட ருவிற்றர் பதிவில்,

”தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்ட உரையை, சட்டப் பேரவையில் படிக்கும்போது சில சொற்களையும் சில பத்திகளையும் ஆளுநர் தவிர்த்திருக்கிறார். இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும் சட்டப்பேரவையையும் அவமதிக்கும் செயலாகும்.

தமிழ்நாடு அரசால் குறிப்பிடப்படும் சில சொற்களில் பாமகவுக்கு உடன்பாடு இல்லை. ஆளுநருக்கும் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசால் தயாரித்து வழங்கப்படும் உரையை மாற்றாமல் படிப்பதுதான் நாகரிகமும் மரபும் ஆகும்.

அச்சிடப்பட்ட ஆளுநர் உரையை மட்டுமே அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டும் என்று கோரி முதலமைச்சர் தீர்மானம் கொண்டு வந்த போது, அவை நடவடிக்கைகள் முடிவடைந்து தேசிய கீதம் இசைப்பதற்கு முன்பாகவே ஆளுநர் வெளியேறியது ஜனநாயகத்துக்கு வலிமை சேர்க்காது.

இந்திய அரசமைப்பு சட்டத்தின்படி அரசும் ஆளுநரும் நிர்வாகம் என்ற நாணயத்தின் இரு பக்கங்கள். அரசுக்கும், ஆளுநருக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே செல்வது நல்லதல்ல. தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக ஆளுநரும், அரசும் இணைந்து செயல்பட வேண்டும்!” இவ்வாறு அந்த பதிவில் கூறியுள்ளார். (ஐ)

# அரசின் கொள்கைகளுக்கு மாறாக ஆளுநர் நடந்து கொண்டுள்ளார்!

## முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை, ஜன. 10

“ஆளுநருக்கு முழு மரியாதை அளிக்கும் வகையில் நாங்கள் நடந்து கொண்டோம். ஆனாலும், அரசின் கொள்கைகளுக்கு மாறாக அவர் நடந்து கொண்டார்” என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் பேரவையில் பேசினார்.

ஆளுநர் உரை மீதான தீர்மானத்தை முன்மொழிந்து தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் சட்டப் பேரவையில் பேசுகையில், “ஆளுநருக்கு வரைவு உரையானது. தமிழ்நாடு அரசாங்கத்தால் ஏற்கெனவே அனுப்பப்பட்டு, அவரால் ஏற்பளிக்கப்பட்டு, அதன்பின்னர் அச்சடிக்கப்பட்டு இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் கணினியிலும் தேவைப்படும் உறுப்பினர்களுக்கு அச்சிட்ட பிரதிகளாகவும் வழங்கப்பட்டுள்ளன.

நம்முடைய திராவிட மொடல் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாக செயல்பட்டு வரும் ஆளுநரின் செயல்பாடுகள் முற்றிலும் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், அரசின் சார்பாக இருக்கின்ற காரணத்தால் நாங்கள் சட்டமன்றப் பேரவை விதிகளைப் பின்பற்றி, ஆளுநர் உரையைத் தொடங்குவதற்கு முன்னர் எங்களது எதிர்ப்பு எதனையும் நாங்கள் பதிவு செய்யவில்லை.

பேரவையிலே மிகவும் கண்ணியத்தோடு, அரசமைப்புச் சட்டத்தின்கீழ் உரையாற்ற வந்துள்ள ஆளுநருக்கு முழு மரியாதை அளிக்கும் வகையில் நாங்கள் நடந்து கொண்டோம். ஆனாலும், எங்களது கொள்கைகளுக்கு மாறாக மட்டுமல்ல, அரசின் கொள்கைகளுக்கே கூட அவர் மாறாக நடந்து கொண்டு, தமிழ்நாடு அரசு தயாரித்து, ஆளுநரால் இசைவளிக்கப்பட்டு, அச்சிடப்பட்ட உரையை முறையாக, முழுமையாகப் படிக்காதது மிகவும் வருந்தத்தக்கது மட்டுமல்ல, சட்டமன்ற மரபுகளை மீறிய ஒன்றும் ஆகும்.

ஆகவே, சட்டமன்றப் பேரவை விதி 17ஐத் தளர்த்தி, இன்றைக்கு அச்சிடப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆங்கில உரை மற்றும் பேரவை தலைவரால் படிக்கப்பட்ட தமிழ் உரை ஆகியன மட்டும், அவைக் குறிப்பில் ஏற வேண்டும் எனும் தீர்மானத்தையும், அதேபோல, இங்கே அச்சிட்ட பகுதிகளுக்கு மாறாக ஆளுநரால் இணைத்து, விடுத்து படித்த பகுதிகள் இடம்பெறாது என்னும் தீர்மானத்தையும் முன்மொழிகிறேன். இத்தீர்மானத்தை பேரவை ஒருமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்” என்று கூறினார். (ஐ)

# தேர்தலை நடத்த நிதி இல்லை என்றால் இராஜாங்க அமைச்சர்களை நீக்குங்கள்

## அரசிடம் கோருகின்றார் ஜீ.எல்.பீரிஸ்



கொழும்பு, ஜன. 10

**தேர்தலை நடத்த நிதி இல்லை என்றால், இராஜாங்க அமைச்சர்கள் 39 பேரை நீக்கவேண்டும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ் அரசைக் கோரியுள்ளார்.**

நேற்று திங்கட்கிழமை சுதந்திர மக்கள் காங்கிரஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்று அரசாங்கம் போலியான பிரசாரங்களைச் செய்து வருகிறது. உண்மையில் நிதி இல்லை என்றால் 39 இராஜாங்க அமைச்சர்களை நீக்க வேண்டும்.

அத்துடன் 39 இராஜாங்க அமைச்சர்களுக்காக 340 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு பாரியளவில் நிதி செலவிடப்படுகிறது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இராஜாங்க அமைச்சர்கள் எவருமில்லாது நாட்டை ஒரு வருடம் ஆட்சி செய்தார் - என்றார். (அ)





## வடக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக மஹிந்த குணரட்ண நேற்று கடமையேற்றார்!

யாழ்ப்பாணம், ஜன. 10

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக மஹிந்த குணரட்ண தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்று திங்கட்கிழமை காலை 11.21 மணியளவில் சுப நேரத்தில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியா லயத்தில் அவர் கடமைகளைப் பொறுப் பேற்றார்.

வடக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, மத்திய மாகாணத் துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் சப்ரகமுவ மாகாணத்துக்கு பொறுப்பான பதில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்த மஹிந்த குணரட்ண வடக்கு மாகாணத் துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## வகுப்புக்கு சென்ற 10 வயது சிறுமியை பலாத்காரம் செய்த ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜன. 10

ஹொரவபொத்தானை பிரதேசத்தில் ரியூசன் வகுப்பில் கலந்துகொண்ட 10 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய குற்றச் சாட்டின் பேரில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப் பட்டதாக ஹொரவபொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். சந்தேகநபருக்கு அதே வயதுடைய ஒரு மகளும் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கனடா அரசால் இலங்கைக்கு 3 மில்லியன் டொலர் நிதி உதவி

கொழும்பு, ஜன. 10

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்படக்கூடியவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கனடா அரசாங்கம் 3 மில்லி யன் டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

கனேடிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து இந்த உதவியை வழங்கியுள்ளன.

அதன்படி உணவு, சுகாதாரம், போஷாக்கு வசதிகள், குடிநீர் தேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை இதன் மூலம் வழங்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இரத்தினக்கல் ஆபரண கண்காட்சி கொழும்பில்




கொழும்பு, ஜன. 10

இரத்தினக்கல் ஆபரணக் கண் காட்சி ஒன்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்றது.

கைத்தொழில்கள் பெருந் தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கடந்த 7 ஆம் திகதி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

50 இற்கும் மேற்பட்ட இரத்தினக்கல் விற்பனைக் காட்சிக் கூடங்களைக் கொண்டமைந்த இந்த இரத்தினக்கல் ஆபரணக் கண் காட்சி, கடந்த 7 ஆம் திகதி சனிக் கிழமை ஆரம்பமாகி நேற்று திங்கட்கிழமை வரை 3 நாட்கள் சர்வதேச இரத்தினக்கல் ஆபரணக் கண்காட்சியாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ். போதனா வைத்தியசாலையில் ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 10

வாழ்க்கைச் செலவு படியை அதிகரித்தல் உள்ளிட்ட பல வேறு கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சிறிலங்கா ஜனரய சுகாதார சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்திய சாலையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது வாழ்க்கைச் செலவு படியை அதிகரித்தல், வங்கிகளில் அதிகரித்த வட்டியை நிறுத்துதல் , முறையற்ற நியமனத்தை நிறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.



இந்தப் போராட்டமானது வைத்தியசாலையின் அத்தியாவசிய சேவைகளைப் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (அ)

## மீனவர்களை கலைப்பதற்கு வான் நோக்கி துப்பாக்கி சூடு

கொழும்பு, ஜன. 10

அம்பாந்தோட்டை கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்துவதற்காக கடற்படையினர் வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை கடலில் இரு மீன்பிடி படகுகள் விபத்திற்குள்ளான சம்பவம் தொடர்பில் அம்பாந்தோட்டை கரையோரப் பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் இடையில் நேற்று காலை வாக்குவாதம் இடம் பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வாக்குவாதம் வலுவடைந்ததை தொடர்ந்தே, கடற்படையினர் வான் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டுள்ளனர். (அ)

# 50 இலட்சம் முட்டைகள் முதற்கட்டமாக இறக்குமதி

கொழும்பு, ஜன. 10

50 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக விலைமனு கோரல் நடவடிக்கைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருப்பதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதாகவும், முதற்கட்டமாக 50 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

எத்தனை முட்டைகளை இறக்குமதி செய்வது, எந்த இறக்குமதியாளரை தேர்வு செய்வது என்ற அனைத்து முக்கிய முடிவுகளும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படும் என்று அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. இருவழி பயணம்!

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமது கட்சி அனைத்து சபைகளுக்கும் போட்டியிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

சில உள்ளூராட்சி சபைகளுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம், அவ்வாறு இல்லாத உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# ரெலோவும் புளொட்டுமே இனிமேல் தெளிவான முடிவு எடுக்கவேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 10

"தமிழ்த் தரப்புக்கள் ஒன்றாக இல்லை. முதலில் நீங்கள் ஒன்றுபடுங்கள். அதன் பின்னர் தீர்வைக் கேட்கலாம் என்று சிங்களத் தலைவர்களின் கிண்டலுக்கே இடம்கொடுத்துள்ளது இலங்கைத் தமிழரசுக் கட்சி. அந்தக் கட்சி திருந்த வேண்டும். இல்லையேல் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் தான் தெளிவான முடிவை எடுக்கவேண்டும்" - என்று ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய முடியாது என்றும், பரந்துபட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக்கு ஒருபோதும் இடமில்லை என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பரந்துபட்ட கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான பேச்சுக்களில் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து வரும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரிடம், தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்வதில்லை என்று அவர்கள் நீண்ட காலமாகக் கூறிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இப்போது மீண்டும் அதைச் சொல்லியிருக்கின்றார்கள்.

பல்வேறு விடயங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும் நிலையில்தான், பரந்துபட்ட கூட்டமைப்புக்கான கோரிக்கையை பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் முன்வைத்தன. அதைத் தமிழரசுக் கட்சி நிராகரித்துள்ளது. ஒன்றில் தமிழரசுக் கட்சி திருந்த வேண்டும். இல்லையேல், புளொட்டும், ரெலோவும் தெளிவான - திடமான முடிவை எடுக்க வேண்டும். பரந்துபட்ட கூட்டமைப்பு அமைப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் - என்றார்.(அ)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் 650 கஞ்சா செடிகளுடன் கைது!

கொழும்பு, ஜன. 10

மொனராகலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார பொலிஸ் விசேட அதிர டிப்படையினரால் 650 கஞ்சாச் செடிகளுடன் அவரது உத்தி யோகபூர்வ இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கைது தொடர்பான மேலதிக விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் உலர்த்துவதற்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 650 கஞ்சாச் செடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமாரவின் உத்தியோகபூர்வ



சாரதியாக கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள், மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் ஆகிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட ஜீப் ஒன்றும், நிலத்தடி உலோகங்கள் போன்ற பொருட்களை கண்காணிக்கும் ஸ்கானிங் இயந்திரமும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது.(அ)

# ஆளுநர் நியமனத்தில் பெரும் இழுபறி நிலை

## ஜனாதிபதி மீது மொட்டு கட்சி அதிருப்தியாம்

கொழும்பு, ஜன. 10

ஒன்பது மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமனம் மேலும் தாமதமாகின்றன. இதனால் மொட்டுக் கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றார்கள் என்று அறியமுடிகின்றது.

மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமன விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வுக்கும் (மொட்டுக் கட்சி) இடையில் சில மாதங்களுக்கு முன் ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

மொட்டுக் கட்சி சார்பில் ஐந்து ஆளுநர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நான்கு ஆளுநர்களும் நியமித்தல் என்பதே அந்த இணக்கப்பாடு.

ஆனால், ஜனாதிபதி எதுவித காரணமும் இன்றி அந்த நியமனங்களை இழுத்தடிக்கின்றார் என்று மொட்டுக் கட்சி எம்.பிக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஏற்கனவே, அமைச்சரவை நியமனம் கூட அப்படியே கிடக்கிறது. இதனால் மொட்டுக் கட்சி எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் மீது கடும் அதிருப்தியில் உள்ளார்கள் என்று அக் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 100 வருடங்கள் பழமையான சிலையை கடத்திய பூசகர் மலையகத்தில் கைது!

கொழும்பு, ஜன. 10

கம்பளை, பல்லே தெல்தொட - வெத தென்ன தோட்ட ஆலயத்தில் இருந்த 100 வருடம் பழமையான சுவாமி சிலையை திருடி, கலஹா பிரதேச கோவில் ஒன்றுக்கு கொண்டு சென்றமை தொடர்பாக பூசகர் ஒருவரும் அவருக்கு உடந்தையாக இருந்த மேலும் ஒருவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதவான் தர்சன அல்விஸ் உத்தரவிட்டார்.

மேற்குறிப்பிட்ட தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த 3 ஆம் திகதி மாலை பூசை செய்வதற்காக கோவிலுக்குச் சென்றபோதே சிலை காணாமல்போன விடயம் தெரியவந்துள்ளது.

இதையடுத்து சிலை திருட்டுபோனமை தொடர்பாக கலஹா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட தேடுதலின்போதே குறித்த சிலை கலஹா பகுதி கோவிலில் இருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சுவாமி சிலை 100 வருடங்களுக்கு மேல் பழமையானது என்பதால் இது குறித்து தொல்பொருள் திணைக்களத்திடம் அறிவிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் கொழும்பில் சிக்கினர்

கொழும்பு, ஜன. 10

கிராண்ட்பாஸ் பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22 மற்றும் 29 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் 1,000 ரூபா போலி நாணயத்தாள் கொடுத்து எரிபொருளை பெற முயற்சித்துள்ளனர்.

இதனையடுத்து, கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று போலி 1,000 ரூபா நாணயத்தாளுடன் இருவரையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஒட்டோவுக்குள் விடப்பட்ட சிசு!

## தாய்ப்பால் ஊட்டிய பெண் கான்ஸ்டபிள்

கொழும்பு, ஜன. 10

நுவரெலியா மாவட்டம், கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகரில், ஓட்டோ ஒன்றுக்குள் கைவிடப்பட்டிருந்த நிலையில் பெண் சிசு உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

பிறந்து 10 நாட்களேயான குழந்தையே இவ்வாறு கைவிடப்பட்டுள்ளது.

குறித்த சிசு நேற்று காலை தலவாக்கலைப் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

பின்னர் அந்தச் சிசுவுக்குத் தலவாக்கலைப் பொலிஸ் நிலையத்திலுள்ள பெண் கான்ஸ்டபிள் ஒருவரால் தாய்ப்பால் ஊட்டப்பட்டு, லிந்துலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சி.சி.ரி.வி. கமராவின் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு, குழந்தையைக் கைவிட்டுச் சென்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணை வேட்டையில் பொலிஸார் இறங்கி யுள்ளனர். (அ)

# மின் கட்டண அதிகரிப்பு குறித்து மகிந்த-ரணில் தரப்புகள் மோதல்!

## அரசுக்குள் நெருக்கடி நிலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 10

**இலங்கையில் மின் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கத்திற்குள் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் இருப்பதாலும், முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சிறுபான்மைக் குழு கட்டணத்தை அதிகரிக்கக்கூடாதென்ற நிலைப்பாட்டில் இருப்பதாலும் இந்த உள்ளக நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

நெருக்கடி நிலை காரணமாக மின்சார கட்டண அதிகரிப்பு தொடர்பான தீர்மானத்தை நேற்று வரை ஒத்திவைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனை துரிதப்படுத்தும் வகையில் மின் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் எனவும், பத்து வருடங்களுக்கு மேலாக மின்சார கட்டணம் அதிகரிக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி ஆளும் கட்சியினரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது என்பது விரும்பி செய்யும் தீர்மானம் இல்லையென்றாலும், அது நாட்டுக்காக செய்யவேண்டிய பணி எனவும், இல்லையெனில் அதன் பாதகமான விளைவுகளை நாடு சந்திக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



# கொழும்பு மேயர் வேட்பாளராக களமிறங்கும் முஜிபுர் ரஹ்மான்!

கொழும்பு, ஜன. 10

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், எம்.பி. பதவியை இராஜினாமா செய்துவிட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது.

கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும் நோக்கில் மேயர் வேட்பாளராக அவரைக் களமிறக்குவதற்கு அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. (அ)

# களத்திலிருந்து ஒதுங்கும் மொட்டு உறுப்பினர்கள்!

கொழும்பு, ஜன. 10

பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களில் அதிகமானவர்கள் இந்தத் தடவை தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்துள்ளனர்.

அவ்வாறு 20 வீதமான உறுப்பினர்கள் தேர்தலில் இருந்து ஒதுங்குகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின் றன.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமை தொடர்பில் அதிருப்தி அடைந்தே அவர்கள் இவ்வாறு ஒதுங்குகின்றார்கள் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஐ.தே.கவுடன் இணைவதா இல்லையா? திரிசங்கு நிலையில் மொட்டுக் கட்சி!

கொழும்பு, ஜன. 10

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதா இல்லை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது பற்றி அந்தக் கட்சிக்குள் இரண்டு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.

பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தனித்துப் போட்டியிடும் நிலைப்பாட்டில் உள்ளனர் எனவும், வேறு சிலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர் எனவும் தென்னிலங்கை வாராந்தப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யானைக் கட்சியோ மொட்டுக்கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுவதற்குத் தயாராக இருக்கின்றது.

மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, கட்சியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களைப் பல தடவைகள் சந்தித்து களநிலவரம் பற்றி பஸில் ஆராய்ந்தார். அப்போது அதிகமானவர்கள் தனித்துப் போட்டியிடவேண்டும் என்றே கூறினார்கள். கிராம மட்டத்தில் யானைக்குச் செல்வாக்கு இல்லை என்றும் அவர்களுடன் சேர்ந்து போட்டியிட்டால் தோல்வியடைந்து விடுவோம் என்றும் அவர்கள் கூறினர்.

ஒருவேளை, இணைந்து போட்டியிட்டால் மொட்டுச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என அவர்கள் கூறியிருந்தனர். இதனைத் தொடர்ந்தே தனித்துப் போட்டியிடுதல் என்ற நிலைப்பாட்டைப் பஸில் எடுத்துள்ளார் என்று அறிய முடிகின்றது.

இருந்தும், இது தொடர்பில் இரண்டு கட்சிகளும் பேசி இறுதி முடிவு எட்டப்படும் என மொட்டுக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிறைக்குள் வைத்து கைதிகளால் தாக்கப்பட்டார் சேபால் அமரசிங்க

## விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 10

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சமூக செயற்பாட்டாளர் சேபால் அமரசிங்க மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



அதன்படி, குறித்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று முன் தினம் கொழும்பு விளக்கமறியல்சாலையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சேபால் அமரசிங்க, சிறைச்சாலையில் உள்ள சில கைதிகளால் தாக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், அவரை தாக்கியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

தலதா மாளிகையை அவமதித்த சம்பவம் தொடர்பில் சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ள புதிய நடைமுறை

கொழும்பு, ஜன. 10

2024ஆண்டில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை எதிர்வரும் மே மாதம் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்களுடன் வகுப்பறையில் கல்வி கற்கக்கூடிய பிள்ளைகளுக்கு 3 வீத இட ஒதுக்கீடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடுமையான குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு 4 வயது முதல் கல்வி கற்பிக்கவும், 5 வயதுக்குள் அவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த குழந்தைகளின் பதிவு குடும்ப சுகாதார சேவை அதிகாரிகளின் உதவியுடன் செய்யப்பட உள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# அதிர்ச்சி சிகிச்சை அறையிலேயே இதுவரையில் உள்ளது இலங்கை!

## ஈஸ்ட் ஏசியா போரம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 10

இலங்கை, தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியேறியுள்ளபோதிலும் இதுவரை அதிர்ச்சி சிகிச்சை அறையிலேயே உள்ளதாக கிழக்காசிய அமர்வு அல்லது ஈஸ்ட் ஏசியா போரம் என்ற அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பொறுத்தவரை, அது பேரண்ட பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவும் உதவும்.

எனினும் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களிலேயே இலங்கை மக்களால் முன்னேற்றத்தை உணரமுடியும் என்று ஈஸ்ட் ஏசியா போரம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் தசாப்தத்தின் பெரும்பகுதிக்கு இலங்கை பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும் என ஈஸ்ட் ஏசியா போரம் கூறியுள்ளது. (அ)

# பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது

கொழும்பு, ஜன. 10


தற்போதைக்கு பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தனியார் பஸ் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் இடம்பெற்றது.

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோதிலும் தற்போதைக்கு பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியாது என பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் இதன்போது தெரிவித்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாத நிலையே காணப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# இரட்டைக் குழந்தைகளில் ஒரு கருவை மட்டும் கலைக்க கோரும் சிக்கலான வழக்கு



சுஷீலா சிங்

தனது வயிற்றில் வளரும் இரட்டைக் குழந்தைகளில் ஒன்றைக் கலைக்க அனுமதி கோரி பெண் ஒருவர் இந்தியாவின் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்தியாவில் 2021ஆம் ஆண்டின் மெடிக்கல் டெர்மினேஷன் ஆஃப் ப்ரெக்னென்ஸி (மருத்துவ காரணங்களுக்கான கரு கலைப்பு) சட்ட திருத்தம் ஒரு பெண்ணுக்கு 24 வாரங்கள் வரை கருக்கலைப்பு செய்ய அனுமதிக்கிறது.

1971ஆம் ஆண்டின் எம்.ரி.பி. சட்டத்தை திருத்திய தன் மூலம், சில அசாதாரண சூழல்களில் கருக்கலைப்புக்கான செல்லுபடியாக்க காலம் 20 வாரங்களில் இருந்து 24 வாரங்களாக அதிகரிக்கப்பட்டது.

மனு தாக்கல் செய்துள்ள இந்தப் பெண்ணின் கர்ப்பத்திற்கு 25 வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

"இது தொடர்பாக, பம்பாய் உயர்நீதிமன்றம் மருத்துவக் குழுவை அமைத்து, 25 வார கர்ப்பிணிப் பெண்ணின் கருவைக் குறைப்பது அதாவது இரண்டு கருக்களில் ஒன்றை அகற்ற முடியுமா என்றும் இது தாய் மற்றும் அவரது வயிற்றில் வளரும் இன்னொரு கரு மீது என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கேட்டுள்ளது," என்று இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அதிதி சக்ஸேனா கூறினார்.

இந்தியாவில் இதுபோன்ற இரண்டாவது வழக்கு இது என்றும் இரண்டுக்கும் இடையே ஒற்றுமைகள் இருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

"முதல் வழக்கு 2020இல் வந்தது. இரண்டுக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமை என்னவென்றால், ஒரு கருவில் அசாதாரண குறைபாடுகள் இருந்தன. மற்றொன்று ஆரோக்கியமாக இருந்தது.

ஆரோக்கியமான கருவைக் காப்பாற்றுவது மற்றும் , மற்றொரு கருவைக் கலைப்பது தொடர்பாக மனு தாக்கல் செய்யப்பட்டது. முதல் வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்றம் இதற்கு அனுமதிக்கவில்லை.

இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றது. கருவைக் குறைக்க உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்தது," என்று அவர் குறிப்பிட்டார்.

"நீதிமன்ற உத்தரவின்படி ஜே.ஜே. மருத்துவமனையின் மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கருவில் குறைபாடு இருப்பதாகவும் கருவைக் குறைக்க முடியும் என்றும் கூறிய மருத்துவர்கள், ஆனால் உடனடியாக அதைச் செய்யாமல் சிறிது காலம் கழித்துச் செய்யுமாறும் இந்தக் குழு யோசனை தெரிவித்துள்ளது," என்று வழக்கறிஞர் சமீபத்திய வழக்கைப் பற்றிக் கூறினார்.

**முழு விவகாரம் என்ன?**

மும்பையைச் சேர்ந்த இந்தப் பெண் செயற்கை கருத்தரித்தல் மூலம் கர்ப்பமானார்.

செயற்கை கருத்தரித்தல் முறையில் கருமுட்டை மற்றும் விந்து, ஆய்வகத்தில் சோதனைக் குழாய்க்குள் கலக்கப்படுகின்றன. அதன் பிறகு உருவாகும் கரு தாயின் வயிற்றில் பொருத்தப்படுகிறது.

இந்தப் பெண்ணின் கணவர் அமெரிக்காவில் வசிக்கி றார். செயற்கை கருத்தரித்தல் முயற்சிக்குப் பிறகு அந்தப் பெண் அங்கு சென்றுவிட்டார். இரட்டைக் குழந்தைகளுக்கு அவர் தாயாகப் போகிறார் என்பது ஆகஸ்ட் மாதத்தில் தெரிய வந்தது.

"நவம்பர் மாதம் பரிசோதனை செய்தபோது, இரட்டைக் கருவில் ஒன்றுக்கு மரபணு குரோமோசோமல் அனாமலி இருப்பது கண்டறியப்பட்டது," என்று அந்தப் பெண் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நபரின் மொத்த குரோமோசோம்களின் எண்ணிக்கை 46. ஒரு குழந்தையின் மரபணுக்கள் பாதி தாயிடமிருந்தும் பாதி தந்தையிடமிருந்தும் வருகின்றன.

இந்த மரபணுக்கள் மற்றும் குரோமோசோம்களில் ஏதேனும் கோளாறு இருந்தால், அது மருத்துவ மொழி யில் மரபணு குரோமோசோமல் அனாமலி அல்லது குரோமோசோம் குறைபாடு என்று அழைக்கப்படுறது.

இதைத் தொடர்ந்து அந்தத் தம்பதி மருத்துவர்களை அணுகினர். கருவைக் குறைக்க மருத்துவர்கள் யோசனை தெரிவித்தனர்.

இந்நிலையில் கர்ப்பமாகி 25 வாரங்கள் ஆகிவிட்ட தால் தம்பதி மும்பை உயர் நீதிமன்றத்தை அணுகினர்.

"மாநிலத்தில் மருத்துவ வாரியம் இல்லை. எனவே இந்த விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றது. மருத்துவக் குழுவை அமைத்து அதில் கருவுறுதல் நிபுணர்களைச் சேர்க்குமாறு நீதிமன்றம் ஜேஜே மருத்துவமனையை கேட்டுக் கொண்டது," என்று வழக்கறிஞர் அதிதி சக்ஸேனா கூறினார்.




கருக்கலைப்பு தாய்க்கும் மற்ற குழந்தைக்கும் பாதுகாப்பானது என்று மருத்துவக் குழு கருதுகிறதா, அதை எப்போது செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றம் வினவி யது.





இந்த கோளாறின் விளைவு என்னவாக இருக்கும்?

வயிற்றில் வளரும் கருவில் இதுபோன்ற கோளாறு கண்டறியப்பட்டால், குழந்தைக்கு டவுன் சிண்ட்ரோம் (மரபணுக் கோளாறு) இதய நோய் அபாயம் பிளவுபட்ட உதடு மற்றும் மேல் வாய் சிந்தனை மற்றும் புரிந்து கொள்வதில் சிரமம் இது தவிர, ரத்தத்தில் கால்சியம் குறைபாடு காது கேளாமை சிறுநீரகத்தின் செயல்பாட்டில் பிரச்னைகள் போன்றவை ஏற்படக் கூடும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

**கரு குறைப்பு என்றால் என்ன?**

"24 வாரங்களில் கருவைக் குறைப்பது மிகவும் பொதுவானது அல்ல. மேலும் கரு பெரியதாக இருக்கும். ஆகவே கரு குறைப்பின்போது பிரச்னைகள் ஏற்படலாம்.

சில நேரங்களில் ஒரே பையில் ஒன்றுக்கும் மேற்பட்ட கருக்கள் இருக்கும். அப்போது இத்தகைய குறைப்பு மேலும் கடினமாகிறது. ஏனெனில் இது ஆரோக்கியமான கருவையும் பாதிக்கக்கூடும்.

எனினும் இந்த வழக்கில் இரண்டு கருக்களும் வெவ்வேறு பைகளில் இருப்பது தெரிய வந்துள்ளது," என்று ஆசியா சேப் அபார்ஷன் பார்ட்னர்ஷிப் என்ற பெயரில் செயல்படும் நெட்வொர்க்கின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சுசித்ரா தல்வி தெரிவித்தார்.

குழந்தையின்மைக்கான சிகிச்சையின் போது, ஒரு பெண்ணுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட கருக்கள் உருவாகின்றன என்று குஜராத்தின் ஆனந்தில் பல ஆண்டுகளாக ஐவிஎப் கிளினிக்கை நடத்தி வரும் டாக்டர் நயனா படேல், பிபிசியிடம் கூறினார்.

**கருவைக் குறைக்கும் செயல்முறை**

கருவை குறைக்கும் செயல்முறையை விளக்கிய அவர், "தாயுடைய வயிற்றின் வழியாக குழந்தையின் இதயத்தில் பொட்டாசியம் குளோரைடு ஊசி போடப்படுகிறது. இதனால் அதன் இதயத்துடிப்பு நின்றுவிடும். இந்த ஊசி நீளமானது.

பின்னர் பெண் 24 வாரங்கள் கண்காணிப்பில் வைக்கப்படுகிறார். இதற்குப் பிறகு கருவின் வளர்ச்சி நின்று அது அமினோடிக் திரவத்தில் உறிஞ்சப்பட்டு விடுகிறது.

மறுபுறம் கருவுக்கு ஆறு அல்லது ஏழு வாரங்கள் மட்டுமே ஆகியிருந் தால் அதை vaginal suction ஊசி மூலமாகவும் வெளியே எடுத்துவிடலாம்," என்று குறிப்பிட்டார்.

ஆனால் 25 வாரங்களுக்கு மேலான கர்ப்பத்தில் பிரசவம் நடக்குமா?

இதற்குப் பதிலளித்த டாக்டர் சுசித்ரா தல்வி, "பல நேரங்களில் குழந்தை நேரத்திற்கு முன்பே பிறந்து விடுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

ஆனால் அத்தகைய சூழ்நிலையில் குழந்தைகளின் நுரையீரலுக்கு காற்றை சுவாசிக்கப் போதுமான திறன் இருக்காது. ஏனெனில் அவற்றின் நுரையீரல் முழுமை யாக வளர்ச்சியடைந்திருக்காது. அத்தகைய சூழ்நிலையில் குழந்தைக்கு NICUஇல் ஆக்ஸிஜன் வழங்கப்படுகிறது.

குழந்தையின் ஆக்ஸிஜன் அளவு குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தால் மற்றும் சீரான ஆக்ஸிஜன் கிடைக்கவில்லை என்றால் அது குழந்தையின் அறிவுத்திறன் அல்லது கண்பார்வையையும் பாதிக்கலாம்," என்று கூறினார்.

முன்கூட்டிய பிரசவம் குழந்தைக்கு ஆபத்தானது என்று அவர் கூறுகிறார். இது ஓர் அசாதாரண சூழ்நிலை என்பதால் இந்த விஷயத்தில் மருத்துவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த வழக்கின் அடுத்த விசாரணை ஜனவரி 16ஆம் தேதி நடைபெற உள்ளது.

# சவால்கள் நிறைந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு



மீரா சிறினிவாசன்

இரு தசாப்தங்களாக இயங்கிவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அதில் பெரும்பாலான காலப்பகுதியில் நீண்டகால தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு தென்னிலங்கை சிங்கள தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறது.

அத்தகைய பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்வொன்றைக் கண்டுவிடமுடியும் என்ற கூட்டமைப்பின் நம்பிக்கையுணர்வை போட்டி தமிழ்கட்சிகளும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தில் இருக்கக்கூடிய விமர்சகர்களும் தவறான மதிப்பீட்டின் அடிப்படையிலானதும் அப்பாவித்தனமானதும் என்று நோக்குகிறார்கள். அவர்களிடம் இருந்து வரும் கண்டனங்களுக்கும் தென்னிலங்கையின் தலைவர்களின் அணுகுமுறைகளின் காரணமாக ஏற்படுகின்ற ஏமாற்றத்துக்கும் மத்தியிலும் கூட்டமைப்பு அதற்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துவதில் நாட்டம் காட்டிவந்திருக்கிறது.

கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனே பெருமளவு நம்பிக்கையை வெளிக்காட்டுகிறார். "ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, பிரிக்கமுடியாத "இலங்கையின் கட்டமைப்புக்குள் தீர்வொனறைக் காண்பதில் அவர் உறுதிகொண்டவராக இருக்கிறார்." நாம் நம்பிக்கையை இழந்துவிட முடியாது. நாம் முயற்சிகளைக் கைவிடமுடியாது" என்று 2018ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளில் கூட்டமைப்பு இணைந்துகொண்டபோது சம்பந்தன் "த இந்து"வுக்கு கூறினார். ஆனால், அந்த செயன்முறைகள் நிறைவுறவில்லை.

கூட்டமைப்பு மீண்டும் இப்போது ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கியிருக்கிறது. நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினைக்கு இலங்கை அதன் 75 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் 2023 பெப்ரவரி 4 க்கு முன்னதாக தீர்வுகாண்பதற்கு ஒன்றாக முன்வருமாறு பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளுக்கு 2022 நவம்பரில் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். கடந்த மாதத்திலும் இந்த மாதத்திலும் இதுவரையில் ஜனாதிபதியுடன் மூன்று தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்திய கூட்டமைப்பு அதன் அதிருப்தியை வெளிப்படுத்தாமல் இருக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினாலும் இராணுவத்தினாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் நிலம்,கொடுமையான பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வருடக்கணக்காக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள், காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விவகாரங்கள் தொடர்பில் கூட்டமைப்பினால் முன்னவைக்கப்பட்ட அவசரமான மூன்று கோரிக்கைகள் விடயத்தில் விக்கிரமசிங்க அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

ஜனவரி 10 நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வொன்றின் கட்டமைப்பு குறித்து ஆராயப்படவிருக்கின்ற அதேவேளை, தமிழர்களின் உடனடி அக்கறைக்குரிய விடயங்களில் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பது குறித்து கூட்டமைப்பு மறுபரிசீலனை செய்யவேண்டிவரும் என்று அதன் பேச்சாளரான யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

225 ஆசனங்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் கூட்டமைப்புக்கு பத்து உறுப்பினர்கள் இருக்கிற்ர்கள். பிரதான அங்கத்துவக் கட்சியாக தமிழரசு கட்சியையும் ஆயுதமேந்திய தீவிரவாத பின்னணியைக் கொண்ட தமிழீழ மக்கள் விடுதலை கழகம் ( புளொட் ), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆகியவற்றை ஏனைய அங்கத்துவக் கட்சிகளாகவும் கொண்டதாக கூட்டமைப்பு இப்போது விளங்குகிறது

தமிழ்த் தேசியவாதிகளை ஐக்கியப்படுத்தும் ஒரு முயற்சியாக 2001 ஆம் ஆண்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. தமிழரசு கட்சியின் கூடுதல் செல்வாக்கின்கீழ் இருந்த தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) மற்றும் ரெலோ ஆகிய கட்சிகள் செயற்பாட்டு இணக்கப்பாடொன்றைக் கண்டன. விடுதலை புலிகள் கூட்டமைப்பை வெளிப்படையாக



**கூட்டமைப்பின் எதிர்காலம் நிச்சயமற்றது. ஆனால், அதற்கான மாற்று ஒன்றை தமிழ் அரசியல் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை**

ஆதரிக்கவில்லை என்ற போதிலும், அவர்களின் வழிகாட்டலில் தமிழ் தேசியவாத இலட்சியத்தின் பாராளுமன்ற அல்லது தேர்தல் அரசியல் பிரிவாக கூட்டமைப்பு இயங்கும் என்பதே வெளியில் சொல்லப்படாத புரிந்துணர்வாக இருந்தது. ஏனைய தீவிரவாதக் குழுக்களும் எதிர்ப்பாளர்களும் அழிக்கப்பட்ட பிறகு அந்த நேரத்தில் தமிழ் மக்களின் "ஏக பிரதிநிதிகளாக" விடுதலை புலிகள் தங்களை நிலைநிறுத்திக்கொண்டார்கள்.

## புலி அடையாளம்

கூட்டமைப்பினர் பிரிவினைவாத விடுதலை புலிகளின் அரசியல் பதிலாட்களாகவே தென்னிலங்கையில் நீண்டகாலமாக நோக்கப்பட்டனர். 2009 போர் முடிவுக்கு வந்த பிறகு பிரிவினைவாதத்தை கூட்டமைப்பு திட்டவட்டமாக கைவிட்டபோதிலும், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் உட்பட சிங்கள அரசியல் சமுதாயத்தில் உள்ள கடும்போக்குவாதிகள் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு புலி முத்திரை குத்தி தொடர்ந்து அவதூறு செய்துகொண்டேயிருந்தனர்.

அரசின் தொடர்ச்சியான பாரபட்சம் மற்றும் இனவாதக் கொள்கைகளை அனுபவிக்கின்ற தமிழர்கள் மத்தியில் பெரும்பாலானவர்களிடையே விடுதலை புலிகளுக்கு ஆதரவு தொடருகின்ற நிலையில் அந்த இயக்கத்திடம் இருந்து முற்றுமுழுதாக துண்டித்துக் கொள்வதென்பது கூட்டமைப்பை பொறுத்தவரை இயலாத ஒன்றாகவே இருந்தது. கூட்டமைப்பில் உள்ள சிலர் தங்களை விடுதலை புலிகளிடம் இருந்தும் அவர்களின் கொள்கைகளில் இருந்தும் தூர விலக்கிக் கொள்கின்ற அதேவேளை, மற்றையவர்கள் தேர்தல்களுக்கு முன்னதாக பிரசாரங்களின்போது புலிகளுக்கு ஆதரவாக பேசுவது வழக்கம். ஆனால், பரந்தளவில் நோக்குகையில், போரின் முடிவுக்கு பின்னரான வருடங்களில் புறக்கணிப்பைக் கைவிட்டு பேச்சுவார்த்தை அரசியலை முன்னெடுத்த கூட்டமைப்பு, கடந்த 21 வருடங்களில் அதன் அங்கத்துவ கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் வடக்கு, கிழக்கில் பரந்த ஆதரவுடன் தமிழ் தேசியவாத அரசியல் பரப்பில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது.

கூட்டமைப்பு ஒரு பிராந்தியக் கட்சியாக இருக்கின்ற போதிலும், குறிப்பாக தென்னிலங்கை கட்சிகளிடையே நெருக்கமான போட்டி என்று வருகின்றபோது தேசிய தேர்தல்களில் கணிசமான செல்வாக்கை கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தேசிய தேர்தலிலும் "ஒரு ராஜபக்சவைத் தவிர வேறு எவரும்" என்ற அணுகுமுறையை கடைப்பிடித்திருக்கும் கூட்டமைப்பு 2010 ஆம் ஆண்டில் எதிரணியின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவையும் 2015 ஆம் ஆண்டில் மைத்திரபால சிறிசேனவையும் 2019 ஆம் ஆண்டில் சஜித் பிரேமதாசவையும் ஆதரித்தது.

சிறிசேன தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் ஆதரவுடன் தேர்தலில் வென்ற போதிலும், அவரது அரசாங்கம் அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை பெரிதாக நிறைவேற்றவில்லை. இதனால் கூட்டமைப்புக்கு அரசியல் ரீதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. 2020 பொதுத்தேர்தலில் அது ஆறு ஆசனங்களை இழந்தது. இந்த தேர்தல் இழப்புக்கு மத்தியிலும் சிறுபான்மைச் சமூகம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தனியொரு பெரிய குழுவாக கூட்டமைப்பே இன்னமும் விளங்குகிறது.

தமிழர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துகின்ற நம்பிக்கைக்குரிய குரலாக கூட்டமைப்பையே மேற்குலக அரசுகளும் இந்தியாவும் நோக்குகின்றன. உள்நாட்டு அரசியல் பரப்பில் போர்காலக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்துவதிலும் விடவும் அரசியலமைப்பு அடிப்படையிலான இணக்கத்தீர்வொன்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக கூட்டமைப்பு மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்ற போதிலும், ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானங்களுக்கு ஆதரவு திரட்டுவதில் கூட்டமைப்பும் அதன் வெளிநாடுகளில் உள்ள ஆதரவாளர்களும் தீவிரமாக செயற்பட்டே வந்திருக்கிறார்கள்.

பல வருடகால எதிரணி அரசியலை தொடர்ந்து 2013 வடமாகாணசபை தேர்தலில் பெருவெற்றி பெற்றதன் மூலம் முதற்தடவையாக கூட்டமைப்பு ஆட்சி செய்வதற்கான அரிதான ஒரு வாய்ப்பைப் பெற்றது. ஆனால் கூட்டமைப்பும் அதன் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் ஐந்து வருட பதவிக்காலத்தில் போரினால் பாதிக்கப்பட்ட அந்த மாகாணத்தின் நன்மைக்காக பயனுறுதியுடைய கொள்கை முன்னெடுப்புக்களையோ அல்லது பொருளாதார மீட்சித்திட்டங்களையோ செய்யவில்லை.

அதேவேளை, மாகாணசபை முறைமையை உறுதியாக ஆதரிக்கும் கூட்டமைப்பு நீண்டகாலமாக தாமதிக்கப்படும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்திக்கொண்டிருக்கிறது. 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து நாடு பூராவும் அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கான ஒரு ஏற்பாடாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாகாணசபைகளினதும் பதவிக்காலம் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் முடிவடைந்துவிட்டது.

சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து இலங்கை அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தம் அர்த்தமுடைய அதிகாரப்பரவலாக்கத்துக்கு போதுமான ஒரு கட்டமைப்பு அல்ல என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருக்கின்றது. ஆனால் அதை பயனுடைய "ஆரம்பப்புள்ளியாக" கருதுகிறது. போட்டிக்கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணி இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

## நிகழ்காலமும் எதிர்காலமும்

தமிழ்த் தேசியவாத அரசியல் சிதைவுறுவதை தடுப்பதற்காக அன்று அமைக்கப்பட்ட கூட்டமைப்பு இன்றுள்ளதைப் போன்று முன்னர் ஒருபோதும் சிதைவடைந்ததில்லை. அதன் அங்கத்துவக் கட்சிகளிடம் பொதுவான நோக்கும் இல்லை, அவை ஒரு குரலில் பேசுவதாகவும் இல்லை. கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் தனிப்பட்ட அரசியல் ஆதாயத்துக்காக பகிரங்கமாக வாக்குவாதங்களில் ஈடுபடவும் செய்கிறார்கள். கூட்டமைப்பின் எதிர்காலம் குறித்து கேள்விகள் எழுகின்றன.

முரண்பாடுகளுக்கு மத்தியிலும் அங்கத்துவக் கட்சிகளை சம்பந்தனே இதுவரையில் ஒன்றுபடுத்தி வைத்திருக்கிறார். அவருக்கு பிறகு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே தலைமைத்துவத்துக்கு வரக்கூடியவர் என்று பரவலாக நோக்கப்படுகின்ற போதிலும், கூட்டமைப்புக்குள் இருக்கும் சிலர் எதிர்க்கிறார்கள்.

கூட்டமைப்பின் தவறுகள் காரணமாக ராஜபக்சாக்களுடன் அணிசேர்ந்து நிற்கும் தமிழ் அரசில்வாதிகள் பயனடைந்ததை 2020 தேர்தலில் காணக்கூடியதாக இருந்தது. தற்போது பாராளுமன்றத்தில் இரு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதன் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

அரசியல் தீர்வைக் காண்பதற்கான அதன் முயற்சியை தொடர்ந்து கொண்டிருக்கின்ற அதேவேளை, கூட்டமைப்பு அதன் கட்டமைப்புக்களை ஜனநாயகப்படுத்துவதற்கோ, ஏனைய தமிழ்பேசும் சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினைகள் உட்பட வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான தந்திரோபாயம் எதையும் வகுப்பதற்கோ அல்லது பெண்களுக்கு கணிசமான வாய்ப்புக்களை கொடுப்பதற்கோ செயற்பாடு எதையும் அக்கறையுடன் முன்னெடுப்பதாக சான்று எதையும் காணவில்லை. கூட்டமைப்பின் எதிர்காலம் நிச்சயமற்றது, ஆனால் அதற்கான மாற்று ஒன்றை தமிழ் அரசியல் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. ( த இந்து)




# செட்டிகுளத்தில் நேற்று 5ஆம் நாள் போராட்டம்

*வவுனியா, ஜன. 10*

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் செட்டிகுளம் நித்திய நகரில் 5ஆம் நாளாக முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தமிழ் அரசியல் கட்சிகளிடையே அரசியல் தீர்விற்கான நடவடிக்கைகள் ஒருமித்த முறையில் முன்னெடுக்கப்படவேண்டும், அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஓரணியில் திரளவேண்டும், வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி மாகாண அலகாக உருவாக்கபடவேண்டும் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

# ஏ.ரி.எம் இயந்திரங்களில் பணம் திருடிய வெளிநாட்டவர்கள் உட்பட 5 பேர் கைது!

*கொழும்பு, ஜன. 10*

தென் மாகாணத்தின் பல பகுதிகளில் அரச வங்கிகளின் ஏ.டி.எம். இயந்திரங்களில் இருந்து பணத்தைத் திருடிய சம்பவம் தொடர்பில் வெளிநாட்டவர்கள் இருவர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வெளிநாட்டவர்கள் கனேடிய மற்றும் பல்கேரிய பிரஜைகள் என தென் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கட்டுநாயக்க பிரதேசங்களில் வைத்து இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி, ஹிக்கடுவ, பத்தேகம ஆகிய இடங்களில் அமைந்துள்ள வங்கிகளின் ஏ.ரி.எம் இயந்திரங்களின் கணினி கட்டமைப்புக்குள் ஊடுருவி மென்பொருள் அமைப்பை மாற்றி, இவர்கள் சுமார் ஒரு கோடி ரூபாவை திருடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கொழும்பில் கட்டுப் பணம் செலுத்தியது மொட்டு கட்சி

*கொழும்பு, ஜன. 10*



பொதுஜன பெரமுன எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக கொழும்பு மாவட்டத்திற்கான கட்டுப் பணத்தை நேற்று திங்கட் கிழமை செலுத்தியுள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் அந்தக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவினர் கொழும்பு மாவட்ட செயலகத்துக்கு சென்று தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தினர்.

# கப்டன் பண்டிதரின் 38ஆம் ஆண்டு நினைவு



*யாழ்ப்பாணம், ஜன. 10*

வல்வெட்டித்துறைப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான கப்டன் பண்டிதரின் 38ஆம் ஆண்டு நினைவு தினம் அவரது இல்லத்தில் நேற்று திங்கட் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் உள்ளிட்ட சிலர், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள், மற்றும் குடும்பத்தார் இணைந்து அஞ்சலி செலுத்தினர்.

**1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி** அச்சுவேலியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாமை படையினர் முற்றுகையிட்டதால் ஏற்பட்ட சமரில் கப்டன் பண்டிதர் உட்பட பல போராளிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

கல்வி tv CHANNEL-1

**10.01.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**10.01.2023**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# காரைதீவில் வர்த்தகர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்

அம்பாறை, ஜன. 10

காரைதீவில் முதன்முறையாக வர்த்தகர் சங்கம் கடந்த வெள்ளிக் கிழமை கலாசார மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் முன்னிலையில், தலைவராக முன்னாள் உதவி தவிசாளர் க. தட்சணா மூர்த்தியும் செயலாளராக கே. குகனேஸ்வரனும் பொருளாளராக கே. மேகலாவும் உபதலைவராக ரி. துரைராஜாவும் உபசெயலாளராக பி. தசதராவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 21 சிரேஷ்ட உறுப்பினர்களையும் 298 அங்கத்தவர்களையும் கொண்ட இச்சங்கம், காரைதீவு 1-12 பிரிவுகளை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழரசு தனித்து சென்றால் கூட்டமைப்பில் ஏனைய தமிழ் தரப்புக்களை இணைப்போம்

## ரெலோ கட்சி கூறுகிறது



மட்டக்களப்பு, ஜன. 10

**இலங்கை தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடுமாக இருந்தால், ஏனைய தமிழ்க் கட்சிகளை இணைத்து பலமான கூட்டணியாகக் களமிறங்குவோம் என ரெலோ அறிவித்துள்ளது.**

எவ்வாறாயினும் கூட்டமைப்பில் உள்ள மற்றைய கட்சிகளும் தனித்துப் போட்டியிடவேண்டுமென கூறுவதற்கு தமிழரசுக் கட்சிக்கு எந்த அருகதையுமில்லை என்றும் அது தெரிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடத் திட்டமிட்டுள்ள நிலையில் ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தம் கருணாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுமாக இருந்தால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகளையும் ஏனைய தமிழ் கட்சிகளையும் இணைத்து ஒரு பலமான கூட்டணியை உருவாக்குவோம்.

எமது உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வந்து பலமான ஒரு கூட்டணியை உருவாக்குவோம்-என்றார். (அ)

# தம்பிட்டியவில் சர்வ மத கலாசார விழா



மட்டக்களப்பு, ஜன. 10

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் சர்வ மத கலாசார விழா மட்டக்களப்பு அம்பாறை எல்லையில் உள்ள மகா ஓயா தம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு அம்பாறை லயன்ஸ் கழக கலாசார பிரிவு திட்ட இணைப்பாளர் லயன் துரைராஜசிங்கம் ஆதித்தன் தலைமையிலான குழுவினர் இதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

லயன்ஸ் கழக 306 சி மாவட்ட ஆளுநர் லயன் பெர்னாட் ஹம்லத் அதிதியாக கலந்து சிறப்பித்தார். கிழக்கு மாகாண லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மகாஓயா தம்பிட்டிய மகாவித்தியாலயத்தில் நான்கு மதங்களையும் சேர்ந்த சர்வமத தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் சர்வ மத தலைவர்களின் ஆசியுரையும், மாணவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளும் மேடை ஏறின.

இதேவேளை, அங்கு வந்திருந்த சுமார் 100 மாணவர்களுக்கு தலா 3000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இன நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் வளர்ப்பதற்கு இது போன்ற சமாதான திட்டங்கள் வழிவகுக்கும் என்று கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

விழாவில் மகாஓயா தம்பிட்டிய மகா வித்யாலயம், புல்லுமலை ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம், உறுகாமம் முஸ்லிம்மகா வித்தியாலயம், ஆயித்தியமலை தமிழ் கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் கலந்து சிறப்பித்தார்கள். (அ)

# அலைபேசி திருத்தும் கடைக்கு நிதியுதவி



மட்டக்களப்பு, ஜன. 10

காத்தான்குடி முதலாம் குறிச்சி பிரதான வீதியிலுள்ள வாலிதைன் பள்ளிவாயல் பகுதியில், கடந்த மாதம் ஏற்பட்ட தீ விபத்தில், முழுமையாக சேதமடைந்த அலைபேசி திருத்தும் வர்த்தக நிலையத்துக்கு உதவும் பொருட்டு வாலிதைன் பள்ளிவாயல் பகுதி வர்த்தகத்தர்களின் அமைப்பால் கடந்த சனிக்கிழமை நிதி உதவி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, வாலிதைன் பள்ளிவாசல் பகுதி வர்த்தகத்தர்கள் அமைப்பின் தலைவர் அஜ்வத், செயலாளர் எஸ்.ஏ.கே பழீலுர் ரஹ்மான், பொருளாளர் ரஹீம் உட்பட அதன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு, வர்த்தக நிலைய உரிமையாளரிடம் நிதியைக் கையளித்தனர். (அ)

# ஈழவர் ஜனநாயக முன்னணி வட,கிழக்கில் தனித்து போட்டி

## செயலாளர் நாயகம் பிரபாகரன் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 10

ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வடகிழக்கில் தனித்துவமாக களமிறங்கவுள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் த. பிரபாகரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஈழவர் ஜனநாயக முன்னணியின் மத்திய குழுக் கூட்டம் கல்லடியில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து ஈழவர் ஜனநாயக முன்னணியின் ஊடக சந்திப்பு நடைபெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் அக்கட்சியின் செயலாளர் நாயகம் த.பிரபாகரன் கருத்து தெரிவித்தார்.



இன்று தமிழ் மக்கள் ஏமாந்த சரித்திரமே உள்ளது. ஒழிய மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுத்ததில்லை.

இன்று தமிழ் மக்களும் நாங்களும் மாற்றத்தை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கின்றோம். அந்த மாற்றத்தை உருவாக்கவேண்டிய கடப்பாடு ஈரோஸுக்கு உள்ளது - என்றார். (அ)



# மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்தி பாண்டிருப்பில் 4ஆவது நாளாக கவனவீர்ப்பு

அம்பாறை, ஜன. 10

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் ஒன்றிணையவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று திங்கட்கிழமை கல்முனை பாண்டிருப்பில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நான்காவது நாளாக இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது.

ஒருமித்த குரலை உரக்கச் செல்வோம் என்ற அடிப்படையில் நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தின் முன்பாக இப்போராட்டம் முற்பகல் 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற்று வருகிறது.

போராட்டத்தில் பல அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள் என்று பலரும் கலந்து கொண்டனர். அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பதாதைகளை ஏந்தி அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் தொடர்ந்து இன்று செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு



# பிரேசில் ஜனாதிபதி மாளிகை, உயர்நீதிமன்று முற்றுகைக்குள்

## தோல்வியடைந்த ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் கொந்தளிப்பு



பிரேசிலியா, ஜன. 10

பிரேசிலின் தீவிர வலதுசாரி முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனா ரோவின் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்த அவரது ஆதரவாளர்கள் தலை நகர் பிரேசிலியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகை, காங்கிரஸ் மற்றும் உயர் நீதிமன்றத்தை முற்றுகையிட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய காங்கிரஸ் மற்றும் உயர் நீதிமன்ற கட்ட டங்களில் போல்சனாரோ ஆதரவாளர் கள் ஜன்னல்கள் மற்றும் தளபாடங்களை அடித்து நொறுக்கு வதை சமூக ஊடகங்களில் காணொளிகள் காட்டின.

அவர்கள் காங்கிரஸ் கட்டடத்தின் கூரையின் மீது ஏறி, தலையீடு மற்றும் பிரேசிலின் இராணுவத்திற்கு வெளிப்ப டையான வேண்டுகோள் என்று எழுதப் பட்ட ஒரு பதாகையை விரித்து வைத்த னர்.

எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதி மாளிகை யில் சுற்றித் திரிவதையும், அவர்களில் பலர் பச்சை மற்றும் மஞ்சள் - பிரேசிலி யக் கொடியின் நிறங்களில் ஆடை அணிந்திருந்ததையும் சமூக ஊடக வீடியோக்களில் காண முடிந்தது.

ஒரு சமூக ஊடக வீடியோ, வெளியே ஒரு கூட்டம் பொலிஸ்காரரை குதிரையி லிருந்து இழுத்து தரையில் விழுத்தி தாக்குவதைக் காட்டியது.

ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டும் முயற்சியில் பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். இந்த சம்பவத்தில் சுமார் 3,000 பேர் ஈடுபட்டதாக உள்ளூர் ஊடகங்கள் மதிப்பிட்டுள்ளன.

கடந்த தேர்தலில் போல்சனாரோவை தோற்கடித்து இடதுசாரி போட்டியாள ரான லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா ஜனாதிபதியாக பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு இந்த முற்றுகை இடம்பெறுகிறது.

ஜனாதிபதி லூலா இந்த முற்று கையை கண்டித்ததுடன், நிலையை கட்டுப்படுத்த உள்ளூர் நிர்வாகத்திற்கு சிறப்பு அதிகாரம் அளித்தார். இம்மாத இறுதிவரை அந்த அதிகாரம் நீடிக்கும்.

ஒரு செய்தியாளர் கூட்டத்தில், அவர் போல்சனாரோவை குற்றம் சாட்டினார். தலைநகரில் பாதுகாப்பு பற்றாக்குறை குறித்து புகார் கூறினார், அதிகாரிகள் “பாசிஸ்டுகள்” மற்றும் “வெறியர்கள்” அழிவை ஏற்படுத்த அனுமதித்துள்ளனர் என்று கூறினார்.

“வெறிபிடித்த நாஜிக்கள், வெறித்தன மான பாசிஸ்டுகள் என்று நாம் அழைக் கக்கூடிய இந்த நாசக்காரர்கள், இந்த நாட்டின் வரலாற்றில் இதுவரை செய்யாத தைச் செய்தார் கள்” என்று சாவ் பாலோ மாநிலத்திற்கு உத்தியோகபூர்வ பயணத்தில் இருந்த லூ லா கூறினார்.

“இதைச் செய்தவர்கள் அனைவரும் கண்டுபிடிக்கப்படுவார்கள், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.” என்றார்.

பிரேசிலில் ஒக்ரோபர் 30 வாக் கெடுப்பு நடந்தது. இதில், லூலாவின் தேர்தல் வெற்றிக்கு எதிர்ப்புத் தெரி வித்து, முன்னாள் ஜனாதிபதி போல்ச னாரோ ஆதரவாளர்கள் சாலைகளைத் மறித்து, வாகனங்களுக்கு தீ வைத்து, இராணுவக் கட்டடங்களுக்கு வெளியே கூடி, ஆயுதப் படைகள் தலையிடுமாறு கேட்டுக் கொண்டனர். தேர்தல் முடிவு கள் மோசடியானவை அல்லது நம்பகத்த ன்மையற்றவை என்று பலர் நம்பினர்.

சில போல்சனாரோ ஆதரவாளர்கள் தேர்தலுக்குப் பிறகு பிரேசிலியாவில் முகாமிட்டுள்ளனர்.

இந்த முகாமில் இருந்தும் பிற பகுதி களிலிருந்தும் மக்கள் பிரேசிலியாவில் உள்ள சதுக்கத்தை நோக்கி அணிவகுத் துச் சென்றனர்.

இது மூன்று சக்திகள் சதுக்கம் என்று அழைக்கப்பட்டது.

ஏனெனில் இதே சதுக்கத்தில் காங்கி ரஸ், ஜனாதிபதி மாளிகை மற்றும் உயர் நீதிமன்றம் உள்ளது. போராட்டக்காரர் கள் மூன்று கட்டிடங்களுக்குள் நுழைந் துள்ளனர். லூலாவின் தேர்தல் வெற்றியை உயர் நீதிமன்றம் அங்கீகரித்தது.

“தங்கள் முக்கிய எதிரி என்று அவர்கள் கருதும் உயர்நீதிமன்றத்தின் உள்ளே சென்றனர், ஏனென்றால் உயர் நீதிமன்றம் ஒரு சார்புடையது என்று அவர்கள் கூறுகிறார்கள். மோசடி தேர் தலை உயர் நீதிமன்றம் அங்கீகரித்ததாக அவர்கள் குற்றம்சாட்டினார்கள்,” என அங்குள்ள வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் பிரேசிலின் நிலைமையை “அபத்தமா னது” என்று விவரித்தார், மேலும் லூ லாவுடன் தொடர்ந்து பணியாற்றுவதை எதிர்நோக்குவதாகவும் கூறினார்.

“பிரேசிலில் ஜனநாயகத்தின் மீதான தாக்குதலையும், அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்றுவதை எதிர்ப்பதை யும் நான் கண்டிக்கிறேன். பிரேசிலின் ஜனநாயக நிறுவனங்களுக்கு எங்கள் முழு ஆதரவு உள்ளது, மேலும் பிரேசி லிய மக்களின் விருப்பத்தை குறைமதிப் பிற்கு உட்படுத்தக்கூடாது” என்று பிடன் ருவிட்டரில் கூறினார். (அ)



# சௌகலில் பஸ் விபத்து; 40 பொதுமக்கள் மரணம்!

டாக்கர், ஜன. 10

மத்திய செனகலில் இரண்டு பஸ்கள் மோதிக்கொண்டதில் 40 பேர் உயிரிழந்தனர் மற்றும் 87பேர் காயமடைந்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், பஸ் ஒன்று ரயர் வெடித்து, எதிரே வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய நகரமான காப்ரைன் அருகே நடந்த விபத்தில், காய மடைந்தவர்கள் மருத்துவமனை மற்றும் மருத்துவ மையத்திற்கு சிகிச்சைக்காக கொண்டு செல் லப்பட்டுள்ளனர் என்று அவர் கள் மேலும் கூறினார்.

ஜனாதிபதி மேக்கி சால் மூன்று நாட்கள் துக்க தினத்தை அறிவித்துள்ளார்.

வீதி பாதுகாப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்க ளின் குடும்பங்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி, காயம டைந்தவர்கள் விரைவில் குணம டைய பிரார்த்திப்பதாக கூறினார்.

செனகலில் போக்குவரத்து விபத்துக்கள் பொதுவானவை. ஆனால் இது சமீபத்திய ஆண் டுகளில் மிக மோசமான ஒன்றா கும். (அ)

# உக்ரைன் தளம் மீது ரொக்கட் தாக்குதல்!

## 600 பேரை கொன்றதாக ரஷ்யா அறிவிப்பு

மொஸ்கோ, ஜன. 10

உக்ரைனின் கிராமடோர்ஸ் கில் உள்ள இராணுவ தற்காலிக தளங்கள் மீது ஆயுதப் படைகள் நடத்திய பாரிய ரொக்கெட் தாக்குத லில் 600இற்கும் மேற் பட்ட உக்ரைன் படை வீரர்களைக் கொன்றதாக ரஷ்யா பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லெப்டி னன்ட் ஜெனரல் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்தார்.

“கிராமடோர்ஸ்கில் உள்ள சில கட்டடங் கள் உக்ரைனிய படைவீரர்களின் சில தற்காலிக தளங்கள் என்பது ரஷ்ய உளவுத் துறை மற்றும் பல்வேறு சுயா தீன சேனல்கள் மூலம் கண்டறி யப்பட்டு நம்பகத்தன்மையுடன் உறுதிப்படுத் தப்பட்டது” என்று செய்தித் தொடர்பாளர் கூறினார்.

“உக்ரைனிய பிரிவுகளின் இந்த தற்காலிக தளங்கள் மீது பாரிய ரொக்கெட் தாக்குதலின் விளைவாக, 600 க்கும் மேற்பட்ட உக்ரைனிய படைவீரர்கள் கொல்லப்பட்டனர்,” என்று அவர் மேலும் கூறினார்.

700இற்கும் மேற்பட்ட உக்ரேனியப் படை வீரர்கள் தங்குமிட எண். 28 இல் இருந்தனர். 600இற்கும் மேற்பட் டோர் கிராமடோர்ஸ்கில் உள்ள தங்குமிட எண். 47 இல் இருந்தனர் என கொனாஷென்கோவ் கூறினார்.

உக்ரைனிய ஆயுதப் படைகள் மீதான தாக்குதல் பதிலடி நடவடிக்கையின் ஒரு பகுதியா



கும் என்று அவர் குறிப்பிட்டார்.

“2023 புத்தாண்டு பிறந்த சில நிமிடங்களில் டொனெட் ஸ்க் மக்கள் குடியரசின் மேகேவ்கா வின் குடியேற்றத்தில் தற்காலிக ரஷ்ய இராணுவத் தளத்தின் மீது கியேவின் ஆட்சி யால் நடத்தப் பட்ட ஒரு சட்ட விரோத வேலைநிறுத்தத்திற்கு பதிலளிக்கும் விதமாக, ரஷ்ய இராணுவப் படை களின் ஒருங்கிணைந்த குழுவின் கட் டளை பதிலடி நடவடிக்கையை நடத்தியது” அவர் சொன்னார்.

முன்னதாக, ரஷ்ய பாது காப்பு அமைச்சகம், ஜனவரி 1 அதிகாலையில் மேகேவ்காவில் உள்ள ரஷ்யாவின் ஆயுதப் படைகளின் தற்காலிக மையத் தின் மீது ஆறு ஹிமார்ஸ் ரொக் கெட்டுகளால் உக்ரைன் நடத் திய தாக்குதலில் 89 ரஷ்ய வீரர் கள் கொல்லப்பட்டதாக அறி வித்தது. (அ)

# தனிமைப்படுத்தல் இல்லாத பயணத்துக்கு சீனா அனுமதி

பீஜிங், ஜன. 10

கொரோனா தொற்று காரணமாக அமுல்படுத்தியி ருந்த பயணிகளுக்கான தனி மைப்படுத்தல் நடவடிக் கையை சீனா முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் சர்வதேச பய ணத்திற்கு கட்டுப்பாடுகளை விதித் திருந்த சீனா நேற்று முன் தினம் முதல் அந்த கட்டுப்பாடுகளை தளர்த்தி யுள்ளது.

அதன்படி நேற்று முன் தினம் சிங்கப்பூர் மற்றும் கன டாவிலிருந்து விமா னங்கள் சீனாவுக்கு வந்ததா கவும் அதில் பயணித்தவர் களுக்கு கோவிட் சோதனை செய்யப்படவில்லை என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாய தனிமைப்படுத் தல்கள், கடுமையான முடக்க கட்டுப்பாடுகள் மற்றும் அடிக்கடி சோதனை ஆகியவற்றின் காரணமாக கடந்த மாதம் பல எதிர்ப்பு போராட்டங்களை சீனா சந்தித்தது.

இதனை அடுத்து கட்டம் கட்டமாக சில தளர்வு களை அறிவித்த சீனா, தற் போது சர்வதேச பயணிகளை யும் அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# எஸ். ஏ. இருபது - 20; இன்று ஆரம்பம்!



கேப்டவுன், ஜன. 10

கிரிக்கெட் தென்னாபிரிக்கா சார்பில் 6 அணிகள் மோதும் எஸ். ஏ. இருபது - 20 என்ற கிரிக்கெட் லீக் தொடர் இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகிறது.

ஐ. பி. எல். தொடரைத் தொடர்ந்து நமது இலங்கை உட்பட பல நாடுகளில் இருபது - 20 பிறீமியர் லீக் போட்டிகள் நடக்கின்றன.

இந்நிலையில், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை முதன்முறையாக இருபது - 20 லீக் தொடரை எஸ். ஏ. இருபது -20 என்ற பெயரில் நடத்துகிறது. இதன் பணிப்பாளராக தென்னாப்பிரிக்க முன்னாள் வீரர் கிரேம் ஸ்மித் செயல்படுகிறார். எம். ஐ. கேப்டவுன், பார்ல் றோயல்ஸ், டேபன் சுப்பர் ஜெயன்ட்ஸ், ஜோபர்க் சுப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப், பிரிட்டோரியா கேபிடல்ஸ் உள்ளிட்ட 6 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்கின்றன.

கேப்டவுனில் இன்று ஆரம்பமாகும் முதல் போட்டியில் எம்ஐ கேப்டவுன் - போர்ல் றோயல்ஸ் அணிகள் மோதுகின்றன. இந்த லீக்கில் மொத்தம் 33 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. தொடக்கப் பிரிவில் ஒவ்வோர் அணியும் தலா 2 முறை மோதும். அதன்பின்னர் புள்ளிகள் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

கேப் டவுன், டர்பன், ஜிபெர்ஹா, பார்ல், செஞ்சூரியன், ஜொகன்னர்ஸ்பேர்க் உள்ளிட்ட 6 நகரங்களில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

இலங்கை நேரப்படி மாலை 5, இரவு 9 மணிக்கு போட்டிகள் நடைபெறும். பெப்ரவரி 8-இல் ஜொகன்னர்ஸ்பேர்க்கில் முதல் அரையிறுதியும் 9இல் செஞ்சூரியனில் இரண்டாம் அரையிறுதியும் பெப்ரவரி 11ஆம் திகதி ஜொகன்னர்ஸ் பேர்க்கில் இறுதி போட்டியும் நடைபெறவுள்ளன.

கேப்டவுன் அணிக்கு ரஷீத் கான், டேர்பன் அணிக்கு குயின்ரன் டி கொக், ஈஸ்டர்ன் கேப் அணிக்கு அய்டன் மார்க்ரம், போர்ல் அணிக்கு டேவிட் மில்லர், ஜொகன்னர்ஸ்பேர்க் அணிக்கு பப் டு பிளெஸ்ஸிஸ், பிரிட்டோரியா அணிக்கு ரைலி ரூசோவ் ஆகியோர் தலைவர்களாக செயல்படுவர். (ஐ)



# அவுஸ்திரேலிய ஓப்பன் நவோமி ஒசாகா விலகல்!

மெல்பர்ன், ஜன. 10

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியிலிருந்து ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா விலகியுள்ளார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி வரும் 16ஆம் திகதி தொடங்கி 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் 2 முறை சம்பியன் பட்டம் வென்ற வீராங்கனை நவோமி ஒசாகா பங்கேற்கவிருந்தார். ஆனால், திடீரென போட்டியிலிருந்து விலகுகிறார் என்று அவர் அறிவித்துள்ளார். விலகலுக்கான காரணத்தையும் அவர் அறிவிக்கவில்லை.

நவோமி விலகல் தொடர்பான அறிவிப்பை அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டிக்குழு அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது. நவோமி ஒசாகாவுக்குப் பதிலாக டயானா யஸ்த்ரேம்ஸ்கா பிரதானச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார் என்றும் போட்டிக் குழு அறிவித்துள்ளது. (ஐ)



# இலங்கையுடனான தொடர் இந்திய அணி அறிவிப்பு!

## பும்ரா விலகல்

மும்பை, ஜன. 10

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா விலகியுள்ளார். அவர் போதுமான உடற்திறன் பெறாத காரணத்தால் இந்த தொடரில் இருந்து விலகியுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

கடந்த 2022 செப்ரெம்பரில் முதுகு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் இருபது - 20 உலகக் கோப்பை தொடரில் இருந்து விலகினார். முன்னதாக, இதே சிக்கல் காரணமாக அவர் ஆசியக் கோப்பை தொடரையும் தவற விட்டிருந்தார். இந்த நிலையில் அண்மையில் அவர் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாட தெரிவு செய்யப்பட்டார். தற்போது இந்த தொடரில் இருந்து அவர் விலகியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஏற்கெனவே அறிவித்த ஒருநாள் அணியை கொண்டு இந்த தொடரில் விளையாடும் எனத் தெரிகிறது.

இந்திய ஒருநாள் அணி: ரோஹித் சர்மா (தலைவர்), ஷுப்மன் கில், விராட் கோலி, சூர்யகுமார் யாதவ், ஸ்ரேயாஸ் ஐயர், கே.எல். ராகுல் (விக்கெட் காப்பாளர்), இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஹார்திக் பாண்ட்யா (உபதலைவர்), வாஷிங்டன் சுந்தர், சஹல், குல்தீப் யாதவ், அக்சர் படேல், முகமது ஷமி, முகமது சிராஜ், உம்ரான் மாலிக் மற்றும் அர்ஷ்தீப் சிங்.

# அடிலெய்ட் ரென்னிஸ் சபலென்கா சம்பியன்!

அடிலெய்ட், ஜன. 10

அடிலெய்ட்டில் நடைபெற்று வந்த சர்வதேச ரென்னிஸ் போட்டியில் பெலாரஸ் வீராங்கனை அரைனா சபலென்கா சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

நேற்று முன்தினம் நடந்த மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் அரைனா சபலென்காவுடன் செக் குடியரசு வீராங்கனை லிண்டா நோஸ்வோவா மோதினார்.

இந்தப் போட்டியில் மிகவும் அபாரமாக விளையாடிய சபலென்கா 6-3, 7-6 (4) என்ற செற் கணக்கில் நோஸ்வோவை வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இது சபலென்கா பெறும் 11ஆவது டபிள்யூ. ரி. ஏ. பட்டமாகும்.

முந்தைய சுற்று ஆட்டங்களில் முன்னணி வீராங்கனைகள் ஆன்ஸ் ஜபேர், அ விக்ரோறியா அசரென்கா, தாரியா கசத்கினா போன்ற வீராங்கனைகளை வீழ்த்திய நோஸ்கோவா, இறுதிச் சுற்றில் எளிதில் தோல்வி அடைந்து 2ஆவது இடம் பிடித்தார்.

தகுதிச் சுற்று மூலம் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியவர் லிண்டா நோஸ்கோவா என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# புதிய விடியல் உதைபந்தாட்டம் இறுதியாட்டத்தில் சென். மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். லீக்கின் அனுசரணையுடன் டான் தொலைக்காட்சி குழுமம் நடத்திவரும் புதிய விடியல் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

போட்டியின் முதல் பாதியில் இரண்டு அணிகளும் மிகவும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. முதல்பாதியாட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் தமது வழமையான வேகமான அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென். மேரிஸ் சில நிமிடங்களில் முதலாவது கோலை அடித்தது.

தொடர்ந்த ஆட்டத்தில் சென்லூட்ஸ்சும் அதிரடி காட்டியது. இரு அணிகளும் அனல்பறக்க ரசிகர்களுக்கு விருந்தளித்தன.

போட்டி நிறைவடைவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்னர் சென். மேரிஸ் இரண்டாவது கோலை அடித்தது. இறுதியில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சென்.மேரிஸ் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில், நாவாந்துறையை சேர்ந்த சென். மேரிஸ், சென். நீக்கிலஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ஐ)

# எந்தவித நெருக்கடி ஏற்பட்டாலும் தேர்தலுக்கு நிதி ஒதுக்கவேண்டும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, ஜன. 10

எவ்வித நெருக்கடி ஏற்பட்டாலும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான பணத்தை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறிரத்நாயக்க இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சித் தேர்தலுக்கு என மதிப்பிடப்பட்ட தொகையை விடக் குறைவான செலவில் தேர்தலை நடத்தி முடிக்க முடியும்- என்றார்.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு கோரும் அறிவித்தலை கடந்த 4 ஆம் திகதி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டது.

அதன்படி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 முதல் 21ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த விரைவில் புதிய சட்டங்கள் வரும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ தகவல்

கொழும்பு, ஜன. 10

**சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சட்ட ஆணைக்குழுவால் முன் மொழியப்பட்ட புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.**

மத நம்பிக்கைகளுக்கு அவதூறு தெரிவிக்கும் வகையில் கருத்து வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய அமைதி மற்றும் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த திட்டமிட்டுள்ள சீர்குலைவை தடுக்கவே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

மதத் தலைவர்களை அவமதிக்கும் வகையிலும் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலும் சிலர் சமூக ஊடகங்களில் பதிவுகளை இட்டு வருகின்றனர்.



இதனை தடுப்பதற்கே சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார். (அ)

# மாணிக்கக்கல் அகழ்ந்த நான்கு பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜன. 10

நோர்வூட் பொலிஸ் எல்லைக்குட்பட்ட பொகவந்தலாவ எலிப்படை 12ஆம் இலக்க தேயிலை மலை காணிப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஒருவர் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளாரென ஹற்றன் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு தொடர்பாக ஹற்றன் குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலுக்கு ஏற்ப, மேற்படி சுற்றிவளைப்பின்போதே நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களால் மாணிக்கக்கல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் ஹற்றன் குற்றத்தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட அனைவரும் பொகவந்தலாவ எலிப்படை கீழ் பிரிவை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கூறினர். (அ)

# உள்ளூராட்சி சபை தேர்தலில் புதியவர்களுக்கு முன்னுரிமை

## பாலித ரங்கே பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஜன. 10

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் தனித்து போட்டியிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவதற்கு சில உள்ளூராட்சிச் சபைகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறிய அவர், அவ்வாறு இல்லாத உள்ளூராட்சிச் சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து போட்டியிடும் எனவும் கூறினார்.

மேலும் திறமையான புதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு தற்போது வேட்பாளர்களின் பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மூன்று மாகாணங்களில் மட்டும் முட்டை 53 ரூபாய்க்கு விற்பனை

கொழும்பு, ஜன. 10

3 மாகாணங்களில் முட்டைகள் தலா 53 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது என முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு சென்று முட்டைகளை விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆனால், சந்தையில் முட்டை 55 ரூபாய்க்கு வாங்க முடியாத நிலை இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதேவேளை, முட்டைகளை இறக்குமதி செய்வதற்கான கேள்வி கோருவதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச நிறுவனங்கள் பயன்படுத்தும் வாகனங்கள் குறித்து விசாரணை!

கொழும்பு, ஜன. 10

அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பயன்படுத்தும் வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்பதாக கணக்காய்வாளர் நாயகம் டபிள்யு.பி.சி.விக்ரமரத்ன குறிப்பிட்டுள்ளார்.

பதிவு செய்யப்பட்டதற்கு இணங்க வாகனங்கள் அரச நிறுவனங்களின் வசமுள்ளனவா அல்லது குறித்த வாகனங்கள் உரிய வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து பரிசீலிக்கப்படவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மட்டத்தில் தனித்தனியாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கண்காணிப்பு அமைப்புகளுடன் தேர்தல் ஆணைக்குழு சந்திப்பு

கொழும்பு, ஜன. 10

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் இடையே சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

அதன்படி நாளை புதன்கிழமை குறித்த சந்திப்பு இடம்பெறும். தேர்தல் அறிவிப்பிற்கு பின்னர் இடம்பெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும் என்றும் அவர் கூறினார்.

குறித்த சந்திப்பில் தேர்தல் சட்டங்கள், தேர்தல் இடம்பெறும் விதம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பை சுற்றி போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, ஜன. 10

கொழும்பை சுற்றியுள்ள பல பகுதிகளுக்கு போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட மூவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களனி, களுத்துறை, பாணந்துறை, நுகேகொட உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கும் இவர்கள் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஹசீஸ் போதைப் பொருட்களை விநியோகித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டபோது, 7 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

## இந்தமாத....

அத்துடன், ஏற்கனவே ஜனாதிபதிக்கு உறுதியளித்தபடி உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பான பட்டியலை இன்றைய சந்திப்பில் ஜனாதிபதியிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்றின் அங்கீகாரத்தைப் பெறவேண்டிய புதிய அரசமைப்பு விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அடுத்தடுத்த சந்திப்புகளில் பேசுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது. இந்தக் கூட்டத் தில் இரா. சம்பந்தன், மாவை. சேனாதி ராஜா, எம். ஏ. சுமந்திரன், த. சித்தார்த் தன், செல்வம் அடைக்கலநாதன் கோவிந்தன் கருணாகரம், ராகவன் ஆகி யோருடன் ஈ. பி. ஆர். எல். எவ்.கட்சி யின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தம்பியின்....

உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொலையுடன் தொடர்புடையவரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

## தமிழரசு....

விடயங்கள் குறித்து கூடி ஆராய்ந்தன.

இந்தச் சந்திப்பில், உள்ளூராட்சி தேர்தல் குறித்து பேசப்பட்டது. எனினும், உள்ளூராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தின் முடிவு குறித்து பங்காளிக் கட்சிகளுடன் பேசவில்லை.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்துப் பேசுவதற்காக இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் பங்காளிக் கட்சியினர் ஒன்றுகூடுவர். இந்தச் சந்திப்பிலேயே தமிழரசின் நிலைப்பாடு தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும் என்று தெரியவருகின்றது. (ஐ)

## இலங்கையின்....

மற்றும் அபிவிருத்தி நிபுணர்கள் குழு ”தி கார்டியன்” நாளிதளுக்கு வழங்கிய அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டு வருவதற்கு ஒரு விரிவான கடன் இரத்து மற்றும் மறுசீரமைப்பு தேவை. இலங்கையின் கடன் நெருக்கடி, வளர்ந்து வரும் உலகளாவிய கடன் நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச சமூகத்தின் தயார்நிலையை சோதிக்கும்.

இலங்கைக்கு கடன் வழங்குவதில் உள்ள இடர்களை ஈடுகட்ட தனியார் கடன் வழங்குநர்கள் அதிக வட்டியை வசூலித்தமையால் அவர்களுக்கு பெரும் இலாபம் கிடைத்துள்ளது. 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தாததற்கும் இந்த வட்டி மறை பங்களித்துள்ளதாகவும் அதிக வட்டி மூலம் இலாபம் பெற்ற அவர்கள் விளைவுகளை எதிர்கொள்ள தயாராக வேண்டும் என்று நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது.

மேலும், திரவ சொத்துக்களில் வர்த்தகம் செய்வதற்கு உதவும் கூட்டு முதலீட்டு நிதியான ஹெட்ஜ் நிதி, நிரந்தர முதலீட்டு திட்டங்களாக அமையாமல், தேவையான போது முதலிடவும் - திரும்பப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தீர்வுக்கான....

செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த. சித்தார்த்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் பங்கேற்பர் என்று அறிய வருகின்றது.

இதேசமயம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரும் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ அல்லது முக்கியஸ்தர் ஒருவரும் பங்கேற்பார் என்று அறிய வருகிறது.

இதேவேளை, ஜனாதிபதியுடனான இன்றைய சந்திப்பில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் பங்கேற்கமாட்டார். அடுத்த சந்திப்புகளில் அவர் பங்கேற்பார் என்றும் அறிய வருகிறது. (ஐ)

## தமிழ்மக்கள்....

இந்தப் பேச்சில், மணிவண்ணன் அணியினர் தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது குறித்துப் பேசப்பட்டதாக விக்னேஸ்வரன் ‘ஈழநாடு’வுக்கு தெரிவித்தார்.

இதேநேரத்தில், மான் சின்னத்தில் போட்டியிடுவதற்கே தாம் விரும்புவதாக மணிவண்ணன் கூறியுள்ளார். (ஐ)

## மின்கட்டண....

மேலும், மீள் பரிசீலனையின் போது மீண்டும் மின் கட்டணம் குறைவடைவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, மின் கட்டண அதிகரிப்பு தொடர்பான யோசனை நேற்று மாலை கிடைக்கப்பெற்றதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## மதுபோதையில்...

(வயது- 37) என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

இரவு சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து அதிகவேகமாக வேலைத்தளத்தை நோக்கி அவர் பயணித்துள்ளார். மந்திகை சந்தியில் - பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அண்மையாக அவர் பயணித்தபோது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இருக்கையில் இருந்து அவர் தூக்கி வீசப்பட்டார்.

இதில், மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.

இவர், மதுபோதையில் வாகனத்தை செலுத்தியிருந்தார் என்று மரண விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

## பருத்தித்துறை...

ஏற்கெனவே தவிசாளர் தெரிவு நடக்கவிருந்த போதும், சபையை நடத்தத் தேவையான உறுப்பினர்கள் இல்லாததால், தவிசாளர் தெரிவை நடத்த முடியவில்லை.

கூட்டமைப்பின் சார்பில் முன்மொழியப்பட்ட வேட்பாளர், சபையை கொண்டு நடத்தும் ஆளுமையற்றவர் என குறிப்பிட்டு, ஏனைய கட்சிகள் சபைக்கு சமுகமளிக்கவில்லை. இந்த நிலையில், இரண்டாவது முறையாக தவிசாளர் தெரிவு இன்று நடைபெறவுள்ளது. இதில் அனைத்து கட்சிகளும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# மக்கள் மனங்களில் இப்போது பெரமுன கட்சியே உள்ளது!

### சாகர காரியவசம் சொல்கிறார்

கொழும்பு, ஜன. 10

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மனங்களில் தனி இடமுண்டு. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் அமோக வெற்றி பெறுவோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கொழும்பு மாவட்டத்தில் உள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களுககான கட்டுப்பணத்தை நேற்று கொழும்பு மாவட்ட பிரதேச செயலக காரியாலயத்தில் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. பொதுஜன பெரமுனவின் பொருளாதார கொள்கையை நாட்டு மக்கள் புறக்கணிக்கவில்லை. மக்கள் மனங்களில் பொதுஜன பெரமுன தனியிடம் பிடித்துள்ளது.

உள்ளூாராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட தயாராகவுள்ளோம். கட்சி என்ற ரீதியில் அமோக வெற்றி பெறுவோம். பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளில் நேரடியாக கலந்துகொண்டுள்ளார்.

அறிவார்ந்த மக்கள் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை நிச்சயம் தோற்றுவிப்பார்கள். தேர்தலை கண்டு அஞ்சவேண்டிய தேவை எமக்கு கிடையாது.

கோவிட் பெருந்தொற்று மற்றும் உக்ரைன் - ரஷ்யா யுத்தம் ஆகிய காரணிகளினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மக்கள் நன்கறிவார்கள். பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஷில் ராஜபக்ஷ உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.

தேர்தல் நடவடிக்கைகள் இவ்வாரம் முதல் மும்முரமாக முன்னெடுக்கப்படும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை - என்றார். (ஐ)

# உணவுப் பாதுகாப்பின்மை 37 சதவீதமாக அதிகரிப்பு!

### உலக உணவுத் திட்டம்

ஜெனிவா, ஜன. 10

உலக உணவுத்திட்டத்தால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு நவம்பர் மாதமளவில் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 37 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

நாட்டின் பொருளாதாரம் நெருக்கடி நிலையிலிருந்து இன்னமும் மீட்சியடையாத நிலையில், அதன்விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது.

அதன்படி கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஆய்வை அடிப்படையாகக் கொண்டு உலக உணவுத்திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையிலுள்ள குடும்பங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் கடந்த ஆண்டு நவம்பர் மாதமளவில் 37 சதவீதமான குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பற்ற நிலைக்கு முகங்கொடுத்துள்ளன.

அதன் காரணமாக அக்குடும்பங்கள் உணவு வேளையைத் தவிர்த்தல், உணவு உட்கொள்ளும் அளவைக் குறைத்தல் மற்றும் உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகக் கடன்பெறல் போன்ற பலதரப்பட்ட உத்திகளைக் கையாண்டு வருகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட சந்தை செயற்திறன் குறிகாட்டியின் பிரகாரம் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன.

அதேவேளை மறுபுறம் குறிப்பாக உணவுப்பொருட்களின் நிரம்பல் தொடர்பில் வர்த்தகர்கள் கரிசனை வெளியிட்டுள்ளனர். இதுஇவ்வாறிருக்க தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் பிரகாரம் மதிப்பிடப்படும் பணவீக்கம் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 70.6 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது நவம்பர் மாதம் 65 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 34 இலட்சம் மக்களுக்கு அவசியமான அவசர உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம்.

இவ்வுதவியின் ஊடாக 14 இலட்சம் மக்களுக்கு நிதிக்கொடுப்பனவு மூலமான உணவுசார் உதவிகள், ஒரு மில்லியன் மாணவர்களுக்கு அவசியமான பாடசாலை உணவுத்திட்டம் மற்றும் 10 இலட்சம் கர்ப்பவதித் தாய்மார்கள், 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு அவசியமான போசாக்கு உணவு என்பன வழங்கப்படுகின்றன.

இந்த அவசர உதவி வழங்கல் செயற்திட்டம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இதுவரை சுமார் 17 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இதனூடாக நன்மையடைந்திருக்கின்றார்கள்.

## பஸிலை....

இரவு விருந்துகள் பஸில் ராஜபக்ஷவின் வீட்டிலேயே அதிகம் நடை பெறுவது

வழமை. இதில் ராஜபக்ஷக்கள் அனைவரும் பங்கேற்பது வழக்கம். இந்நிலை யில், புத்தாண்டு பிறந்த நாளில் பஸில் ராஜபக்ஷவின் மனைவி புஷ்பா ராஜபக்ஷ சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிகழ்வில் வழக்கமாக பங்கேற்கும் ராஜபக்ஷக்கள் எவரும் இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று அறிய வருகிறது. அத்துடன், பல அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும் 10 முதல் 12 வரையான பாராளுமன்ற உறுப்பினர்களே பங்கேற்றனர் என்றும் அறிய வருகிறது. (ஐ-சி)

# மைத்திரி, விமல், டலஸ் அணிகள் விளக்கு சின்னத்தில் களமிறக்கம்!

கொழும்பு, ஜன. 10

**சிறிலங்கா சுதந்திரக்கட்சி, விமல் அணி மற்றும் டலஸ் தரப்பு என்பன இணைந்து ‘சுதந்திர மக்கள் கூட்டமைப்பு’ எனும் பெயரில் புதிய கூட்டணியை உருவாக்குவதற்கு ஆரம்பகட்ட இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.**

அத்துடன், உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கூட்டணியாக விளக்கு சின்னத்தில் போட்டியிடுவது சம்பந்தமாகவும் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை, ரத்தன தேரர் தலைமையிலான அமைப்பு என்பன மேற்படி கூட்டணியில் அங்கம் வகிக்கவுள்ளன. (அ)

# கிளிநொச்சியிலும் நேற்று 5 ஆவது நாள் கவனயீர்ப்பு



கிளிநொச்சி, ஜன. 10

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் கிளிநொச்சியில் 5ஆவது நாளாக நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 முதல் இயக்கச்சிச் சந்தியில் இடம்பெற்றது.

இதன் போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (அ)

# மாளிகை அரசியல் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஜன. 10

வங்குரோத்தான இந்த நாட்டுக்கு ஜனாதிபதி மற்றும் அலரி மாளிகைகள் என்றுமே தேவையில்லை என்பதே தனது கருத்து என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை ஜயவர்தனபுர உயர் பாதுகாப்பு பகுதிக்கு மாற்ற உள்ளதாக அரசாங்கம் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

வங்குரோத்தான இந்த நாட்டுக்கு இந்த மாளிகைகள் என்றுமே தேவையில்லை என்பதே எனது கருத்து. இதற்கு முன்னரும் நான் இந்த கருத்தை தெரிவித்திருக்கிறேன்.

அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை இவை அனைத்தையும் எம் நாட்டின் மாணவர் சமுதாயத்திற்கும், இளம் சமுதாயத்தினருக்கும் நவீன முறையில் தகவல் தொழிநுட்பம், ரோபோடிக் , உயிரியல் தொழிநுட்பம் போன்ற துறைகளில் அறிவை வழங்குவதற்கான, வளர்ப்பதற்காகன ஒரு இடமாக மாற்ற வேண்டும்.

நாம் மாற்றுவோம். இந்த நாட்டிற்கு இவ்வாறான மாளிகை அரசியல் தேவையில்லை. ஜனாதிபதியாகட்டும், பிரதமராகட்டும், அவர்கள் சொகுசு வாழ்க்கை வாழும் அந்த மாளிகை அரசியல், மாளிகை கலாசாரத்தை முற்றாக இல்லாமலாக்குவோம்-என்றார். (அ)

# தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு இன்று!




யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் 48 ஆவது நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் முற்றவெளில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (அ)

# வைத்தியசாலைகளில் நேற்று ஊழியர்கள் பணி புறக்கணிப்பு

கொழும்பு, ஜன. 10

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டமையினால் பல வைத்தியசாலைகளின் இயல்பு நடவடிக்கை பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வேதனம் அல்லது கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை, பெற்றுக்கொண்டுள்ள வங்கிக் கடனுக்கு வட்டி வீதத்தை அதிகரித்தமை மற்றும் புதிய ஆட்சேர்ப்பு ஆகியனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் அவசர சேவை உள்ளிட்ட வைத்தியசாலையின் பல்வேறு வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

எனினும், கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை உள்ளிட்ட மேலும் சில வைத்தியசாலைகளில் இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (அ)

# யாழ்.பொற்பதியில் புலிகளின் ஆயுதங்கள் தேட அகழ்வு பணி





யாழ்ப்பாணம், ஜன. 10

கொக்குவில் - பொற்பதி வீதியில் தனியாருக்கு சொந்தமான காணியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.நீதவான் நீதிமன்றப் பதிவாளர் சுந்தரமூர்த்தி பிருந்தாவின் தலைமையில் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆரிய பந்து வெதகெர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் யருள் ஆகியோரின் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின.

இதன்போது பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே நேற்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நான்கு இடங்களில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் எதுவித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை.

அகழ்வுப் பணிகள் இடம்பெறும் இடத்திற்கு அருகிலேயே விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவின் முகாம் மற்றும் விடுதலைப் புலிகளின் சட்ட, மருத்துவக் கல்லூரி ஆகியன அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)


**பக்க வடிவமைப்பாளர் தேவை!**



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop**

**தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை

**eelanaduweekly@gmail.com**

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது

**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : பத்திரிகை தலைப்பு செய்தி
07.45 மணி: வானிலை அறிக்கை
07.50 மணி : பல்சுவை நிகழ்ச்சி
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : ஜாலிய ஜிம்கானா-நேரலை
**பகல்**
1.00 மணி : வழிப்போக்கன் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படக்காட்சிகள்
04.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : ஹலோ கோடம்பாக்கம்



6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : குறுந்திரை நேரம்
**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



7.30 மணி : சாட்சியம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு